ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

...ள்: இருபது — Valampurii

...ள்ளுவர் ஆண்டு 2041 பங்குனி 18 வியாழக்கிழமை (01.04.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 103



ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாந் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சிமெந்து


## ...திபதி மகிந்த இன்று ...ப்பாணத்துக்கு விஜயம்

(...யாழ்ப்பாணம்)
...ந்த ராஜபக்ஷ இன்று யாழ்ப் ...ஜயம் செய்கின்றார். ஐக்கிய ... கூட்டமைப்பு வேட்பாளர்க ...ப் பிரசாரம் செய்யவே ஜனா ...பக்ஷ இன்று யாழ்ப்பாணம் ...ரிவிக்கப்பட்டது.

இதேவேளை யாழ்ப்பாணத்துக்கு வரும் ஜனாதிபதி வலி.வடக்கு மீள்குடியமர்வு குறித்தும் கவனம் செலுத்துவார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை யாழ்ப்பாண விஜயத்தை முடித்துக் கொண்டு வவுனியாவுக்கு விஜயம் செய்கின்றார். (02 ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவின் ஆட்கொணர்வு மனு மேல்நீதிமன்றில் நேற்று விசாரணை

(கொழும்பு)

ஜெனரல் சரத் பொன்சேகா தொடர்பான மனுக்கள் நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையை மே மாதம் 3 ஆம் திகதிக்குப் பிற்போட்ட நீதிமன்றம் சரத் பொன்சேகாவின் இராணுவ நீதிமன்றத்திற்கு எதிரான மனு தொடர்பான அதன் உத்தரவில் தற்போது நிலவும் நிலைமையைப் பேணுமாறு பிரதிவாதிகளுக்குப் பணிப்புரை விடுத்தது.

ஜெனரல் (20 ஆம் பக்கம் பார்க்க)

# ...தித உரிமை நிலைமை சீரின்மையால் ...லங்கைக்கான சலுகைகள் இரத்து

## ...பிரிட்டன் அறிவிப்பு

(...பு)

...ரிமை நிலைமைகளைக் கருத்தில் கொண்டே இலங் ...ஜீ.எஸ்.பி. சலுகைத் திட்டம் இரத்துச் செய்யப்பட்டுள்ள ...தானிய வெளிவிவகார அமைச்சர் டேவிற் மிலிபான்ட் ...ள்ளார். இலங்கையுடன் திறந்த வர்த்தக உறவுகளைப் ...த ஐரோப்பிய ஒன்றியம் அதிக நாட்டம் காட்டி வருவ ...தறிப்பிட்டுள்ளார். (02 ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவின் உடல்நிலை மோசம்; சுவாசிப்பதற்கும் சிரமப்படுகின்றார்!

### அனோமா பொன்சேகா கவலை

(கொழும்பு)

எனது கணவரின் உடல்நிலை தொடர்ச்சியாக மோசமடைந்து வருகின்றது. சுவாசிப்பதற்கும் சிரமப்படுகின்றார். இராணுவத்தின் விசேட வைத்திய நிபுணர்களைக் கொண்டு அவரது உடல்நிலை பராமரிக்கப்பட்டு வருவதாக இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் பிரசாத் சமரசிங்க வெளியிட்டு வரும் கருத்துக்கள் உண்மைக்குப் புறம்பானவை என பொன்சேகாவின் மனைவி அனோமா தெரிவித்துள்ளார்.

இராணுவப் (20 ஆம் பக்கம் பார்க்க)

## ...ல் மீண்டும் ...டும் மின்சாரம்

(...ாழ்ப்பாணம்)
...த்தில் மின்சாரம் தடைப்படும் ...டும் ஏற்படத் தொடங்கியுள் ...லை சில மணிநேரமும் இரவு ...மணிநேரமும் மின்சாரம் ...து. மாலை 6.45 மணியள ...மின்சாரம் சில பகுதிகளுக்கு ...ங்கப்பட்டதாகவும் ஏனைய ...ன்று மணிநேரம் கழித்தே ...கவும் பிரதேச தகவல்கள் (02 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையை நெருக்கடிக்குள்ளாக்க பிரிட்டன் அரசாங்கம் செயற்படுகின்றது

### மிலிபான்டின் கருத்துக்கு கெஹலிய கண்டனம்

(கொழும்பு)

பிரிட்டன் வெளிவிவகாரச் செயலாளர் டேவிற் மிலிபான்ட் இலங்கை தொடர்பில் வெளியிட்டுள்ள கருத்துக்களை நிராகரிப்பதாகப் பாதுகாப்புப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல குறிப்பிட்டுள்ளார்.

பிரிட்டன் வெளிவிவகாரச் செயலாளர் இலங்கை தொடர்பில் விமர்சனப் பாங்கான கருத்தினை வெளியிட்டுள்ள காலச் சூழ்நிலை சந்தேகத்தை வலுப்படுத்தியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

விடுதலைப்புலிகளுக்கு எதிராக அரசாங்கம் அடைந்த வெற்றியை உதாசீனம் செய்யும் வகையில் பிரிட்டன் செயற்படுகின்றது.

திட்டமிட்ட (02 ஆம் பக்கம் பார்க்க)






# ஜனாதிபதியின் யாழ்.வருகையோடு வலி. வடக்கு மக்களுக்கு விடிவு கிட்டுமா?

## மீள்குடியேற்ற புனர்வாழ்வுக்குழு அறிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த 20 வருடங்களுக்கும்மேலாகத் தமது சொந்த மண்ணில் வாழும் உரிமை மறுக்கப்பட்ட நிலையில் வலி. வடக்கு மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

தமது வயிற்றில் நெருப்பைக் கட்டியவாறு சுமார் ஒரு லட்சம் மக்கள் இன்று விரக்தியின் எல்லையில் வாழ்ந்து வருகின்றனர் என வலி. வடக்கு மீள்குடியேற்றம் புனர்வாழ்வுக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அவர்கள் வெளியிட்ட அறிக்கை வருமாறு,

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஜனாதிபதியின் செயலாளர் பசில் ராஜபக்ஷ, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோர் வலி. வடக்கு மக்களின் 75 வீதமான பிரச்சினைகள் தீரும் என்று உறுதியளித்தனர்.

இதுபற்றி 10.01.2010 இல் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ள ஜனாதிபதி அறிவிப்பு விடுப்பார் என்றும் கூறியிருந்தனர். ஆனால் யாழ் வந்த ஜனாதிபதி இவ் விடயம் பற்றி வாய்திறக்காமையால் மக்கள் படு ஏமாற்றம் அடைந்தனர்.

ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்த ஓரிரு வாரங்களில் ஏதோ சில காரணங்களைக் காட்டி இப்பகுதிகளிற் சென்று குடியேறுவது முற்றாகவே தடுக்கப்பட்டது.

குந்தியிருக்க நிலமின்றி செய்யத் தொழிலின்றி, தேடுவாரற்ற நடைப்பிணங்களாக வாழும் இம் மக்கள் இன்று வாழ்வா, சாவா? என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இவர்களுடைய பிரச்சினைகளுக்குத் தற்போதைய தன் வருகையின் போது ஜனாதிபதி என்ன சொல்லப் போகின்றார் என ஆவலுடன் எதிர்பார்க்கின்றனர் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

## யாழில் வரதராஜப்பெருமாள்

(யாழ்ப்பாணம்)

ஈபி.ஆர்.எல்.எவ்.வரதர் அணித் தலைவர் வரதராஜப்பெருமாள் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கு வந்துள்ள அவர் தனது விஜயம் குறித்து இன்று காலை 10 மணிக்கு ஊடகவியலாளர்களைச் சந்தித்து விளக்கமளிக்கவுள்ளார்.

வரதராஜப்பெருமாள் கடந்த 29 ஆம் திகதி இந்தியாவிலிருந்து இலங்கைக்கு விஜயம் செய்தார். (எ)

## காணி மாவட்ட பதிவக பணிகள் இடைநிறுத்தம்

நாடாளுமன்றப் பொதுத் தேர்தலை முன்னிட்டு காணி மாவட்ட பதிவகத்தின்பணிகள்யாவும் எதிர்வரும் 5ஆம் திகதி தொடக்கம் 9 ஆம் திகதி வரை நடைபெற மாட்டாது என காணி மேலதிக மாவட்டப் பதிவாளர் ப.பிரபாகர் அறிவித்துள்ளார்.

அதன் பணிகள் மீண்டும் எதிர்வரும் 12ஆம் திகதி வழமை போல் நடைபெறும் எனவும் அவர் அறிவித்துள்ளார். (எ)

## இருவேறு விபத்தில் இருவர் படுகாயம்

வடமராட்சியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற இருவேறு விபத்துச்சம்பவங்களில் இருவர் படுகாயமடைந்தனர்.

சந்நிதி கோவிலுக்குச் சென்று கொண்டிருந்த போது உடுப்பிட்டிப் பகுதியில் குறுக்கே நாய்பாய்ந்ததில் மோட்டார்சைக்கிள் விபத்துக் குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்தார்.

பருத்தித்துறை மூன்றாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த ந.சசிக்குமார் (வயது 27) என்பவர் படுகாயமடைந்தார்.

இதேவேளை கரவெட்டி யாக்கரு பிள்ளையார் ஆலயத்துக்கு அண்மையில் நேற்று முன்தினம் காலை மோட்டார் சைக்கிளும் லொறியும் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்தார். மட்டுவில் தெற்குசாவகச்சேரியைச் சேர்ந்த அ.தேவானந்தன் (வயது 26) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இவர்கள் இருவரும் சிகிச்சைக்காக மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ச-24)

## மனித உரிமை நிலைமை...

இலங்கையில் போருக்கு பின்னரான அரசியல் மற்றும் மனித உரிமை நிலை வரம் குறித்து பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் டேவிட் மிலிபான்ட் செவ்வாய்க்கிழமை இரவு பிரிட்டனின்கரிசனைகளைவெளிப்படுத்தினார்.

பிரிட்டனில் வாழுகின்ற இலங்கையின் சிங்கள, தமிழ், முஸ்லிம் மற்றும் பறங்கியின மக்களின் சந்திப்பு ஒன்றை இலங்கைக்கான பிரிட்டிஷ் பிரதமரின் சிறப்புத் தூதுவரான நாடாளுமன்ற உறுப்பினர் டெஸ் பிரவுண் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் மைக்ஃ பொஸ்டர் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

அந்த சந்திப்பில் வீடியோ மூலம் உரையாற்றிய டேவிட் மிலிபாண்ட் இலங்கை முன்னுரிமை கொடுக்க வேண்டிய மூன்று முக்கிய விடயங்களை வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் அரசியல், பொருளாதார மற்றும் சமூக மாற்றங்களை வன்செயல்கள் மூலம் கொண்டுவர முடியாது என்று கூறிய மிலிபாண்ட், அங்கு வன்செயல்கள் குறைக்கப்படுவதற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என்று கூறியுள்ளார். வன் செயல்கள் இலங்கையில் எந்த சமூகத்துக்கும் பலனைத்தராது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை சமூக, அரசியல் மற்றும் பொருளாதார உரிமைகள் அனைத்து இலங்கையருக்கும் சமமாக கிடைக்க வழி செய்யப்பட வேண்டும்என்றும் அவர் கூறியுள்ளார்.

உண்மையான ஜனநாயகம் என்பது, நியாயமான தேர்தல், சுதந்திரமான ஊடகம் மற்றும் சுயாதீனமான நீதித்துறை ஆகியவற்றிலேயே தங்கியுள்ளது.

சிவில் சமூகத்தின் பெறுமானங்களில் சிறுபான்மையினரின் உரிமைகள் மதிக்கப்படல் ஒரு முக்கிய அம்சம்.

இலங்கையுடன் வெளிப்படையான மற்றும் பங்களிப்புடனான ஒரு வணிக உறவைப் பேண ஐரோப்பிய ஒன்றியம் விரும்புவதாக கூறிய அவர், ஆனால் மனித உரிமைகள் விவகாரங்கள் காரணமாகக ஜி.எஸ். பிளஸ் சலுகைகளை இடைநிறுத்த வேண்டிய நிலைக்கு தாம் தள்ளப்பட்டுவிட்டதாகவும் கூறினார். (ச-5,14)

## இலங்கையை...

வகையில் இலங்கை அரசாங்கத்தை நெருக்கடியான நிலைக்கு இட்டுச் செல்லும் வகையில் இந்த அறிக்கையை டேவிற் மிலிபாண்ட் வெளியிட்டுள்ளார். மிலிபாண்டின் இந்த அறிக்கை குறித்து அரசாங்கத்தின் விசேட பிரதிநிதிகள் தக்க பதிலை விரைவில் அளிப்பார்கள். சட்டம், ஒழுங்கு, பாதுகாப்பு மற்றும் நீதிமன்றக் கட்டமைப்பு, ஜனநாயகம் போன்றவை தொடர்பில் பிரிட்டன் வலியுறுத்தியுள்ளது.

தேர்தல்களின் மூலம் மட்டும் நல்லாட்சியை ஏற்படுத்த முடியாது எனவும் சிறந்தோர் நீதிமன்றக் கட்டமைப்பின் அவசியம் மிகவும் விஞ்சிநிற்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டியது நாகரிக சமூகத்தின் தார்மீகப் பொறுப்புக்களில் ஒன்றாகும் என மிலிபாண்ட் குறிப்பிட்டுள்ளார். (எ-5)

## யாழில்...

இதேவேளை மின்சாரப் பாவனை அதிகரித்துள்ள நிலையில் மின்வெட்டினை அமுல்படுத்த வேண்டியநிலை ஏற்படக்கூடும் என மின்சார சபைத் தகவல்கள் தெரிவித்தன. (எ)

## ஜனாதிபதி...

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வன்னி மாவட்ட வேட்பாளர்களை ஆதரித்து இன்று மாலை 3 மணிக்கு வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெறவிருக்கும் தேர்தல் பிரசாரக் கூட்டத்திலும் மகிந்த ராஜபக்ஷ உரையாற்றவுள்ளார். (ச-5)


பாராளுமன்றப் பொதுத் தேர்தல் - 2010 யாழ் மாவட்டம்

உங்களோடு ஒருவராய், உங்களோடு உடனிருந்து.
உங்களுக்கு உதவிட ....

அப்பாத்துரை விநாயகமூர்த்தி LL.B
(சிரேஷ்ட சட்டத்தரணி,
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)



தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு
(இலங்கை தமிழரசுக்கட்சி)

சுயேட்சைக்குழு-10
யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டம்
அன்பார்ந்த யாழ். தேர்தல் தொகுதி தமிழ் மக்களே!



Dr.S.N. Thanihasalampillai
B.A, M.A, PhD.
SLEAS Class I,Dip. in Ed,Dip. in Ed Management.
Senior Consultant

- சுயநலத்துக்காக வீரவசனங்களைப் பயன்படுத்துவோரை நம்பி ஏமாற வேண்டாம்.
- பாராளுமன்ற உறுப்புரிமையைத் தமது சொந்த வியாபாரத்துக்காகவோ, சொகுசு வாழ்க்கைக்காகவோ பயன்படுத்துவோரின் கதைகளையும் நம்பி ஏமாற வேண்டாம்.
- அச்சுறுத்தல்களுக்கும் அடிபணிய வேண்டாம்.

கல்வி, விவசாயம், மீன்பிடி, பொருளாதாரத் துறைகளில் எமது மண்ணை மீண்டும் மிகச்சிறப்படையச் செய்யக்கூடிய, மக்களோடு மக்களாக இருந்து இக்கட்டான சூழ்நிலைகளிலும், துணிச்சலாகச் சேவை செய்த, செய்யக்கூடிய ஆற்றல் கொண்ட கலாநிதி க.நா.தனிகாசலம்பிள்ளையை ஆதரித்து வெற்றி பெற வாக்களியுங்கள்.

சுயேட்சைக்குழு-10

1 2 3 4 5 6 7 8 9 10 11 12

(ச-6005) -யாழ்ப்பாணச் சமூக அபிவிருத்தி நலன்விரும்பிகள்

ஓராண்டு நினைவினிலே...

தோற்றம் 01 10 1940

மறைவு 12 04 2009



அமரர்
சின்னையா புலேந்திரன்
(ஓய்வுபெற்ற இ.போ.ச.சாரதி)

திதி: திருதியை 01.04.2010

அப்பா! அப்பா! என்றழைத்த எமக்கு
அன்பு மொழி பேசியவரே
நிழலாய் இருந்து எங்களை
வழிகாட்டிய எம் தெய்வமே!
இன்று நிழற்படமாய் போனதெங்கே?
ஆண்டொன்று சென்றாலும்...
ஆறுதில்லை எங்கள் மனம்!
எம்மை விட்டுப் பிரிந்தாலும் உங்கள்
நினைவினிலே
பின் தொடருமே! எங்கள் மனம்.
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கும்....

'ரஜனி மஹால்'
புகையிரத நிலைய வீதி,
சுன்னாகம்.

மனைவி,
மகன்மார், மகள்,
மருமகள், பேரன்.

(66)

# இன்று ஒரு தகவல்

## வினோத உயில்கள்

மனிதன் எந்த நேரத்தில் எப்படி நடந்து கொள்வான் என்று யூகிப்பது ரொம்ப கஷ்டம்!

அவனிடமிருக்கும் விசேஷமே அதுதான்.

உயிரோடிருக்கும் வரைக்கும் ஓடியாடி பணம், சொத்து சேர்க்கிறான்.

தனக்குப் பின் அந்தப் பணமும் சொத்தும் யாருக்குச் சேரவேண்டும் என்று உயில் எழுதி வைக்கிறான்.

இன்றைக்குத் தகவல் என்னவென்றால்...

வேடிக்கையான மனிதர்கள் எப்படி எப்படியெல்லாம் விசித்திரமாக உயில் எழுதி வைக்கிறார்கள் என்பதுதான்.

உயிலை பொதுவாக எதில் எழுதுவார்கள்?

பேப்பரில் தானே எழுதி வைப்பார்கள்.

மெக்சிக்கோவில் ஒருத்தர் என்ன பண்ணினார் தெரியுமா?

தன்னுடைய மார்பிலேயே உயிலை பச்சை குத்திக் கொண்டாராம். அவருடைய நினைப்பு அதை யாராலும் அழிக்க முடியாது என்று. நினைப்பெல்லாம் சரிதான். இருந்தாலும் அவர் அப்படி செய்ததால் பலபேர் தலையைப் பிய்த்துக் கொள்வது போல் ஆகிவிட்டது.

என்ன ஆச்சு தெரியுமா? ஒருநாள் திடீரென்று அவர் இறந்து போனார்.

அதன்பின் அவரை என்ன செய்வது?

பிணத்தை புதைத்துதானே ஆக வேண்டும்.

சொந்தக்காரர்களெல்லாம் பிணத்தைப் புதைக்கக்கூடாது என்று சொல்லிவிட்டார்கள். அதை புதைத்தால் மார்பில் எழுதியிருக்கும் உயிலும் அழிந்து விடுமல்லவா, அதனால் அப்படி வம்பு பண்ணினார்கள்.

நீண்டகாலமாக அதைப் புதைக்காமல் பக்குவம் பண்ணி வைத்திருந்தார்கள். கேஸ் கோர்ட்டுக்குப் போனது. நீதிபதி, குத்தியிருந்த உயிலின் நகலை எடுத்துக் கொண்டார்.

அதன்பின் அந்த உடம்பை புதைத்து விட்டார்கள். எப்படியிருக்குப் பாருங்க இந்த விவகாரம்!

இன்னொரு வேடிக்கையான ஆசாமி (ஜோசையா ட்விஸ்) ஒரு உயில் எழுதி வைத்தார். அவர் எப்படி எழுதிவைத்தார் தெரியுமா?

தான் இறந்த பின் சவ ஊர்வலத்தில் பாண்ட் வாசிக்கும் ஒவ்வொருவருக்கும் தலா 40 டொலர் கொடுக்க வேண்டும் என்று எழுதினார்.

ஊர்வலத்தில் கலந்து கொள்பவர்களுக்கு 20 டொலர் செலவில் நிலக்கடலையும் வெல்லமும் வாங்கிக் கொடுக்க வேண்டும் என்றும் அத்துடன் தன்னுடைய ஆறுபிள்ளைகளுக்கும் தலா 2 டொலர் மட்டுமே கொடுக்க வேண்டும் என்றும் எழுதிவைத்தார்.

பாருங்க... அவருக்குப் பிள்ளையாகப் பிறப்பதை விட அவருடைய சவ ஊர்வலத்தில் கலந்து கொள்பவர்கள் அதிர்ஷ்டசாலிகள். நிலக்கடலையும் வெல்லமும் சாப்பிட்டுக் கொண்டு போய் வந்திருக்கலாம்.

இதைவிட வேடிக்கையான இன்னொரு சம்பவம். பிரான்ஸில் 90 வயதான மூதாட்டி ஒருவர் இறந்து விட்டார். உயில் எழுதி வைத்துவிட்டுத்தான் இறந்து போனார்.

சொந்தக்காரர்களெல்லாம் வந்து கூடி விட்டார்கள். உயிலை எடுத்து வாசியுங்கள் கேட்போம் என்றார்கள். வக்கீல் உயிலை எடுத்து வாசிக்க ஆரம்பித்தார்.

உயிலில் அந்த அம்மா என்ன எழுதியிருந்தார் தெரியுமா? "நான் என்னுடைய குடும்ப டாக்டருக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். என்னுடைய நீண்ட ஆயுளுக்கு காரணம் அவர் தான். எனது அறையில் ஒரு மரப்பெட்டி வைத்திருக்கிறேன். அந்தப் பெட்டியில் இருப்பது முழுவதும் அவருக்குத் தான் சொந்தம். அதனுடைய சாவி என் படுக்கைக்கு அடியில் இருக்கிறது என்று அந்த உயிலில் எழுதியிருந்தது.

வக்கீல் உயிலை வாசித்து முடித்தார். சொந்தக்காரர்கள் முகத்தில் ஈயாடவில்லை. என்ன இது? இந்தக் கிழவி பெட்டியில் இருக்கிறது எல்லாவற்றையும் டாக்டருக்கு என்று எழுதி வைத்துவிட்டது என்ற எரிச்சல். உடனே அந்த டாக்டருக்குத் தகவல் சொல்லி அனுப்பினார்கள். அவரும் வந்து சேர்ந்தார்.

அந்த மரப்பெட்டியைத் தூக்கிக் கொண்டு வந்து அவருக்கு முன்னால் வைத்தார்கள். எல்லோருக்கும் முன்னால் அந்தப் பெட்டியைத் திறந்தார்கள். உள்ளே என்ன இருந்தது தெரியுமா?

அந்த டாக்டர் 20 வருடமாக அந்த அம்மாவுக்குக் கொடுத்த மருந்து, மாத்திரை, டாக்டரின் துண்டுகள் எல்லாம் அதில் பத்திரமாக இருந்ததாம்.

இதற்கு என்ன அர்த்தம்?

குடும்ப டாக்டர் கொடுத்த மருந்து மாத்திரையை சாப்பிடாமல் இருந்ததனால்தான் அந்த அம்மா 90 வயது வரைக்கும் இருந்ததாகவும், அதனால் தன்னுடைய நீண்ட ஆயுளுக்கு காரணம் அவர் தானென்றும் அந்த உயிலில் எழுதியிருந்தாராம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# சைவ சமய அபிவிருத்திக் கழகத்தின் செயல்முறைப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகம் நடத்திய செயல்முறைப் போட்டி முடிவுகள் பரீட்சைச் செயலரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு,

**கோலம் போடுதல் போட்டி**
**(மேற்பிரிவு)**

க. ரூபாஜினி (சங்கிலியன் வீதி, நல்லூர்), த. சிவாஜினி (இராமநாதன் கல்லூரி), பி. முத்துலட்சுமி (கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்).

**கோலம் போடுதல் போட்டி**
**(மத்திய பிரிவு)**

அ. யோகேஸ்வரி (வண். நாவலர் மகா வித்தியாலயம்), சி. கௌதமி (கொட்டடி நமசிவாய வித்தியாலயம்), ஜெ. பிருந்தாயினி (யாழ். இந்து மகளிர் கல்லூரி).

**மாலைகட்டுதல் போட்டி**
**(மேற்பிரிவு)**

திருமதி. பு. சிவசக்தி (வட்டு வடக்கு சித்தங்கேணி), து. வக்சலா (இணுவில் இந்துக் கல்லூரி), தே. ஜனார்த்தனன் (உரும்பிராய் இந்துக் கல்லூரி).

**மாலை கட்டுதல் போட்டி**
**(மத்திய பிரிவு)**

து. சண்சியா (அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி), த. கீர்த்தனா (இணுவில் இந்துக் கல்லூரி), ர. கேமதர்சினி (வண். நாவலர் மகா வித்தியாலயம்).

**தோரணம் பின்னுதல் போட்டி**
**(மேற்பிரிவு)**

வ. றொபின்சன் (உரும்பிராய் இந்துக் கல்லூரி), ஜெ. மகிந்தன் (நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை), ச. சாம்பவி (யாழ். இந்து மகளிர் கல்லூரி).

**தோரணம் பின்னுதல் போட்டி**
**(மத்திய பிரிவு)**

ஞா. விதுசன் (வண். நாவலர் மகா வித்தியாலயம்), சி. ஜிந்துயா (கொக்குவில் இந்துக் கல்லூரி), செ. லைசாந் (கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயம்). (ஓ)

### வடமாகாண கலாசார விளையாட்டு திணைக்களங்கள் வழங்கும்

# வர்ண இரவும், கலாசார நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண விளையாட்டுத் திணைக்களமும் கலாசார திணைக்களமும் இணைந்து நடத்தும் 'வர்ண இரவும் கலாசார நிகழ்வும்' இம்மாதம் 5 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 5 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ. இளங்கோவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக வடமாகாண பிரதம செயலாளர் ஏ. சிவசுவாமி கலந்து கொள்ளவுள்ளார்.

நிகழ்வில் யாழ். இராமநாதன் கல்லூரி மாணவிகளின் வரவேற்பு நடனமும், கொழும்பு அருசிறி கலையகத்தின் கலா சங்கம் நிகழ்வும் அடுத்து உடற்பயிற்சி போட்டியில் வெற்றிபெற்ற வவுனியா இறம்பைக்குளம் பெண்கள் ம.வி. ,யாழ். மானிப்பாய் மகளிர் கல்லூரி, இளவாலை சென் ஹென்றியரசர் கல்லூரி ஆகிய பாடசாலைகளுக்கான விருது வழங்கும் நிகழ்வும், தெல்லிப்பழை பிரதேச கலாசார சபாவின் 'நாம்செய்த தவம்' நிகழ்வும் இடம் பெறவுள்ளது.

மேலும் காற்பந்து, குத்துச்சண்டை, உடற்பயிற்சி, கபடி மற்றும் கராத்தே ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு யாழ். பண்டத்தரிப்பு சாயி சுருதி கலையகத்தின் 'புதுமைப்பெண்' நிகழ்வும் நடைபெறவுள்ளது.

மேலும் கிரிக்கெற், காற்பந்து ஆகிய விளையாட்டுக்களில் வெற்றி பெற்றவர்களுக்கான ஆளுநர் விருது வழங்கலும் தொண்டைமானாறு அபிநயா சுரபி கலைமன்றத்தின் 'தில்லானா' நிகழ்வும் நல்லூர் இமாலயா நடன குழுவின் புதிய வார்ப்புகள் நடனமும் யாழ் கல்வியியற் கல்லூரி மாணவர்களின் நடனமும் இடம்பெறவுள்ளது. (ஓ-4)



இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக்கிளையில் இடம்பெற்ற சனிக் கிழமை வங்கிச் சேவை ஆரம்பநிகழ்வில் வங்கி முகாமையாளர் போ. பிரான்ஸிஸ் தலைமை உரையாற்றுவதையும் உதவிப் பொது முகாமை யாளர் வி.எஸ்.சிவநாதன், பிராந்திய முகாமையாளர் கே.பி. ஆனந்த நடேசன் மற்றும் வங்கி அதிகாரிகள் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

## இராசி பலன்

01-04-2010
(பங்குனி 18 , வியாழக்கிழமை)
திருதியை பின்னிரவு 4.34 மணிவரை
சுவாதி முன்னிரவு 9.10 மணிவரை
இராகுகாலம் 1.48-3.11 மணிவரை
சுபநேரம் 7.41-9.11 மணிவரை
காரைக்கால் அம்மையார் குருபூசை.
புனித வியாழன்.
அமிர்தசித்தம்.

| | |
|---|---|
| மேடம் | களஸ்திர நன்மை, பிரயாணம், காரிய சித்தி, பொருள் சேர்க்கை. |
| இடபம் | தொழில் முன்னேற்றம், சுவாரஸ்யம், உறவினர் வருகை, ஆரோக்கிய நிலை. |
| மிதுனம் | குடும்பக் கவலை, பணக்குறைவு, காரிய இடையூறு, போசன சுகக் குறைவு |
| கடகம் | மனச்சோர்வு, பித்த ரோகம், முயற்சி தாமதம், சுபசெலவு. |
| சிங்கம் | அந்நியர் சந்திப்பு, வாகன சுகம், எடுத்த காரியம் கைகூடும், போசன சுகம். |
| கன்னி | வீண் பகை, தனவிரயம், ரோக நிலை, முயற்சி தாமதம். |
| துலாம் | தெய்வ சிந்தை, பாராட்டு, உறவினர் சந்திப்பு, முயற்சி கைகூடும். |
| விருச்சிகம் | எடுத்த காரியம் தாமதமாகும், சயன சுகக்குறைவு, பிரயாணம், மனஸ்தாபம். |
| தனுசு | பெருமையடைதல், காரிய அனுகூலம், உறவினர் வருகை, தேகநலன். |
| மகரம் | கடின முயற்சி, நண்பர்கள் உதவி, இனிய செய்தி, போசன சுகம். |
| கும்பம் | கட்டுப்பாடு, திடீர் பயணம், பெரியோர் சந்திப்பு, உறவினர் வருகை. |
| மீனம் | பிறருக்கு உதவுதல், காரிய தாமதம், வீண் பகை, தனவிரயம். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 50 | 60 | 50 |
| பச்சைமிளகாய் | 50 | 60 | 80 |
| தக்காளி | 50 | 60 | 30-40 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 40 | 40 |
| கோவா | 30 | 40 | 40 |
| கரட் | 80 | 90 | 100 |
| பூசணி | 30 | 50 | 40 |
| புடோல் | 30 | 40 | 40 |
| வாழைக்காய் | 30 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 60 | 60 | 50 |
| பெரிய வெங்காயம் | 50 | 60 | 60 |
| பாகற்காய் | 60 | 70 | 80 |
| வெண்டிக்காய் | 40 | 50 | 40 |
| கரணைக் கிழங்கு | 30 | 40 | 50 |
| பயிற்றங்காய் | 50 | 60 | 40 |
| லீக்ஸ் | 70 | 80 | 80 |
| பீற்றூட் | 40 | 50 | 50 |
| கறிமிளகாய் | 80 | 90 | 80 |
| முருங்கைக்காய் | 250 | 300 | 300 |
| போஞ்சி | 70 | 80 | 80 |
| கத்தரிதம்புள்ள | 30 | 40 | 40 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 30 |
| தேசிக்காய் | 90 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 30 |

# பாராளுமன்றத் தேர்தல் 2010


3

ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன்
(தோழர் ரங்கன்)
வடமராட்சி வலய அமைப்பாளர்


4


அலெக்ஸாண்டர்
சூசைமுத்து
(தோழர் சார்ள்ஸ்)
தென்மராட்சி வலய அமைப்பாளர்


6

கந்தசாமி
கமலேந்திரன்
(தோழர் கமல்)
தீவக வலய அமைப்பாளர்


8

சந்திரகுமார் முருகேசு
(தோழர் அசோக்)
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்


10

பசுபதி சீவரட்ணம்
(தோழர் கி.பி -ஜீவா)
தேசிய அமைப்பாளர்

எனது அன்புள்ளம் கொண்ட வடபகுதி வாழ் வாக்காளப் பெருமக்களுக்கு எமது கட்சியாகிய ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் 2010 பாராளுமன்றத் தேர்தலில் நாங்கள் எதற்காகப் போட்டியிடுகின்றோம் என்பதை எனது மக்கள் முன் சமர்ப்பிக்கின்றேன்.
இலங்கையின் ஆறாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச அவர்களுடன் இணைந்த, அகில இலங்கை ரீதியாக 30க்கு மேற்பட்ட தமிழ், முஸ்லிம், மலையக, சிங்கள அரசியல் கட்சிகளுடனும், எமது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியும் கூட்டிணைந்த பொதுச்சின்னமாக வெற்றிலைச் சின்னத்தை 2010 தேர்தலில் போட்டியிடுவதற்கு தெரிவுசெய்தோம் என்பதை அறியத்தருகிறோம்.

- எமது கொள்கையான மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்ற கொள்கையின் அடிப்படையில், மத்திய அரசுடன் இணைந்து முழு அளவிலான ஒரு வேலைத்திட்டத்தை முழு வீச்சில் வட பகுதி வாழ் மக்களுக்கு வழங்குவதற்காக நாங்கள் இதில் பங்காளிக்கட்சியாக இணைந்தோம்.

- முன்னுரிமை அடிப்படையில் வன்னிப் பிராந்தியத்திலிருந்து இடம்பெயர்ந்த மூன்று இலட்சம் மக்களுக்குமான முழு அளவிலான மீள்குடியேற்றத்தை மக்களின் பூரண திருப்தியுடன் அரசுடன் சேர்ந்து நிறைவுசெய்தல் எமது முதலாவது தலையாய கடமையாகும்.

- இடம்பெயர்ந்த மக்களின் அங்கவீன முற்றவர்களின் வாழ்க்கையை வளப்படுத்துவதற்கான வழிவகைகளை அரசுடன் சேர்ந்து நிறைவுசெய்தல்.


- தடுப்பு முகாம்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ள எமது உறவுகளை துரிதமாக விடுவித்து அவர்களின் குடும்பங்களுடன் இணைத்து அவர்களுக்கு ஒளிமயமான எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுப்பது எமது கடமையாகும்.



கௌரவ அமைச்சர்
கே.என். டக்ளஸ் தேவானந்தா 9
(செயலாளர் நாயகம், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி)


11

முருகுப்பிள்ளை சிறீபதி
முன்னாள் ஹாட்லிக்
கல்லூரி அதிபர்


12

சில்வேஸ்த்திரி
அலென்ரின்
(தோழர் உதயன்)
யாழ் மாவட்ட அமைப்பாளர்



X

வெற்றியின் சின்னமாம் வெற்றிலைச் சின்னத்தில்
யாழ் மாநகரை வென்றெடுத்தோம்
மீண்டுமொரு மகத்தான வெற்றியைப் பெற்று
உரிமையையும் அபிவிருத்தியையும் வென்றெடுப்போம்

(சி-5006)

# இலங்கையின் முதலாவது திரைப்படக் கிராமம் ஜனாதிபதியினால் திறந்து வைப்பு

(கொழும்பு)

திஸ்ஸமகாராம பிரதேசத்தில் நிர்மாணிக் கப்பட்டுள்ள இலங்கையின் முதலாவது திரைப்படக் கிராமம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

235 ஏக்கர் விஸ்தீரணத்தைக் கொண் டுள்ள இக்கிராமத்தின் முதல்கட்ட நிர்மாணப் பணிகளிற்காக 40 கோடி.ரூபா நிதி செல விடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வையொட்டி பிரபல கலைஞர் கள் பங்கு கொள்ளும் கலை நிகழ்ச்சிகள் என்பனவும் இன்னும் பல அம்சங்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மஹிந்தராஜபக்ஷ திரைப்படக் கிராமம் எனப் பெரிடப்பட்டுள்ள இக்கிராமத்தில் இலங் கையின் பிற நகரங்களின் தோற்றங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளதாகவும் இதன் மூலம் அக்கிராமத்திலிருந்தே ஏனைய கிரா மங்களின் காட்சிகளைப் படமாக்கிக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள் ளது. (2-14)

# லசந்த படுகொலைச் சந்தேக நபர்களை தொடர்ந்தும் தடுப்புக் காவலில் வைத்து விசாரிப்பதற்கு நீதிமன்றம் அனுமதி

(கொழும்பு)


சண்டே லீடர் பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் களை தொடர்ந்தும் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்ய நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகத் தின் பேரில் கைது செய்யப்பட்ட நபர்களை தொடர்ந்து விசாரணை செய்ய அனுமதிக்கு மாறு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் நீதி மன்றில் அனுமதி கோரினார்.

தி நேசன் பத்திரிகையின் பாதுகாப்புப் பத்தி எழுத்தாளர் கீத் நொயர், ரிவிர பத்திரி கையின் பிரதம ஆசிரியர் உபாலி தென்னக் கோன் ஆகியோர் மீது தாக்குதல் நடத்திய சம்பவத்துடனும் குறித்த நபர்களுக்கு தொடர் பிருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது.

குறித்த படுகொலை மற்றும் தாக்குதல் சம்பவங்களுடன் குறித்த சந்தேக நபர்க ளுக்கு தொடர்பு இருக்கக் கூடியதற்கான வலுவான ஆதாரங்கள் கிடைக்கப் பெற்றுள் ளதாக பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (2-4)

# ஆண்டவரின் இராவுணவு நிகழ்வை நினைவுகூரும் 'புனித வியாழன்'



(யாழ்ப்பாணம்)

புனித வாரத்தில் அனுஷ்டிக்கப்படும் புனித வியாழனாகிய இந்நாளில் ஆண்டவ ரின் இராவுணவு நிகழ்வு நினைவு கூரப்படுகின்றது.

திருச்சபையின் மிகப் பழமையான வழக் கப்படி, மாலை வேளையில், கடைசி இராவுண வுத் திருப்பலி இறைமக்கள் அனைவரும் முழுப்பங்கேற்க கொண்டாடப்படும். இந்த நாளில் கிறிஸ்து அன்பின் அடையாளமாக வும், தமது உடனிருப்பை உணர்த்தும் அருட் சாதனமாகவும், உறவின் சின்னமாகவும், பகிர் வின் அடையாளமாகவும், சமத்துவத்தின் சின்னமாகவும் நற்கருணையை ஏற்படுத்தினார்.

## இன்று புனித வியாழன்

சீடர்களின் பாதங்களை கழுவி அன்புக் கட்டளை வழங்கினார். தமது பணி வாழ்வின் புனித கருவியாக பணிக் குருத்துவத்தையும் ஏற்படுத்தினார்.

இன்றைய நாளின் வழிபாடுகள் நான்கு பகுதிகளாக வகுக்கப்பட்டு நிகழ்த்தப்படுகிறது. அவை,

இறைவாக்கு வழிபாடு, பாதம் கழுவுதல், நற்கருணை வழிபாடு, நற்கருணை இடமாற் றப் பவனி என்பனவாகும்.

நற்கருணை இடமாற்றப் பவனியானது நம் மீட்பரான இயேசு தம் திருத்தூதர்களுடன் ஜெஸ்தமனி எனும் தோட்டத்திற்கு புறப்படு வதை நினைவுகூரும் வகையில் இடம்பெறு கின்றது.

*"ஒரு மணி நேரம் கூட என்னோடு விழித்திருக்க உங்களுக்கு வலுவில்லையா?"* என்று கேட்ட இயேசுவை, இறை மக்கள் தனியாகவும், குடும்பமாகவும், குழுவாகவும் ஒன்று கூடி தரிசித்து ஆராதனை செய்வார்கள்.

இந்த புனித வாரத்தில் இன்று வியாழக் கிழமை முதல் வெள்ளி, சனி ஆகிய புனித நாட்கள் மிகவும் முக்கிய நாட்களாகும். பாஸ்கா வியாழன் உச்சக்கட்ட வழிபாடு புனித வியாழனோடு ஆரம்பமாகி புனித சனி இர வோடு முடிவடைகின்றது.

இந்த நாட்களில் நடைபெறும் வழிபாடு கள் மூன்று வேறுபட்ட வழிபாடுகள் அல்ல, மாறாக அவை யாவும் ஒரேயொரு வழி பாடாகவே அமையும்.

*நன்றி - பாதுகாவலன்*

# புதிய பாராளுமன்ற உறுப்பினர் நியமனம் குறித்த ஐ.தே. கட்சியின் கோரிக்கை நிராகரிப்பு

(கொழும்பு)

புதிய பாராளுமன்ற உறுப்பினர்கள் இரு வருக்கு பதவிப் பிரமாணம் வழங்குவது தொடர் பிலான ஐக்கிய தேசியக் கட்சியின் கோரிக் கையை பாராளுமன்ற நிர்வாகம் நிராகரித் துள்ளது.

அமைச்சர்களான ஜோன்ஸ்டன் பெர்னா ண்டோ மற்றும் இந்திக்க பண்டாரநாயக்க ஆகியோரின் பாராளுமன்ற உறுப்புரிமை தொடர்பில் தெளிவற்ற தன்மை காணப்படு வதாக அது அறிவித்துள்ளது.

இதனால் ஐக்கிய தேசியக் கட்சியினால் பரிந்துரை செய்யப்பட்டுள்ள அனுரகொபல் லாவ மற்றும் டி.எம். பண்டாரநாயக்க ஆகி யோர் இருவருக்கு பதவிப் பிரமாண நிகழ் வுகளை ஏற்பாடு செய்ய முடியாதெனவும் அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் நோக்கில் எதிர்வரும் 6 ஆம் திகதி பாராளுமன்றம் கூட் டப்படவுள்ளதாகவும் இந்த விசேட அமர்வுக ளின் போது பதவிப் பிரமாண நிகழ்வுகளை நடாத்த முடியாது எனவும் அறிவித்துள் ளது.

எவ்வாறெனினும் பதவிப் பிரமாண நிகழ் வுகளை காலம் தாழ்த்துவதற்கான அவசியம் கிடையாது எனவும் வேண்டுமென்றே காலம் தாழ்த்தப்படுவதாகவும் ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மற்றும் இந்திக்க பண்டாரநாயக்க ஆகியோரது பாரா ளுமன்ற உறுப்பினர் பதவிகளுக்கு வெற்றி டம் ஏற்பட்டுள்ளதாக பாராளுமன்ற பொதுச் செயலாளர் தம்மிக்க கித்துலேகொட தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-6)






# உணவுப் பொருட்களை பெறுவதில் சிரமத்தை எதிர்நோக்குகின்றோம்

## ஒட்டுசுட்டான் மக்கள்

(கொழும்பு)

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பகுதியில் மீள் குடியேறிய மக்கள் தாம் தினமும் ரின் மீன் உணவையே உட்கொள்ள வேண்டியுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இங்கு மீன்,இறைச்சி,முட்டை,பால் இல்லாமையால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுவருவதாகவும் ,பலநோக் குக் கூட்டுறவுச்சங்களிலேயே மீன் ரின்னை பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் பொதுச் சந்தை பொதுமக்கள் பாவனைக்கு விடப்படாமையினால் பொருட்களை பெற்றுக்கொள்வதற்கு வவுனியா செல்ல வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். (2-6)


பாராளுமன்றப் பொதுத் தேர்தல்-2010

இலங்கைத் தமிழரசுக் கட்சி

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு



தனியார் பணியாளர்களின் ஊழியர் சேமலாப நிதிக் கணக்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் தேசிய அடையாள அட்டை இலக்கத்துடன் இணைக்கப்படாமை குறித்து தொழில் அமைச்சருக்கு சுட்டிக்காட்டி அந்த நடைமுறையை யாழ்ப்பாண மாவட்டத்திலும் அமுல் செய்வித்ததுடன் இதனால் பல வசதிகளையும் பணியாளர்கள் பெற்றுக் கொள்ள வழிவகுத்தவர்.

சீ.வீ.கே.சிவஞானம்

(முன்னாள் யாழ். மாநகரசபை ஆணையாளர், பட்டயச் செயலாளர்)

1 2 3 4 5 6 7 8 9 10

11 12

தமிழ்த் தேசிய தாயக தன்னாட்சி நோக்கிய பயணிப்பு

(சி-4892)


# விரைவான பயணமொன்றை மேற்கொள்ளவே மூன்றிலிரண்டு பெரும்பான்மை அவசியம்

## பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

விரைவான பயணமொன்றை மேற்கொள்வதற்கே மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியமென பிரதமர் தெரிவிக்கின்றார். அக்குரஸ் பகுதியில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டபோது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்தும் பேசிய பிரதமர் பயங்கரவாதம் தற்போது முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் அனைவரும் தற்போது விடுதலை அடைந்துள்ளதாகவும் கூறினார்.

எனவே ஏனைய விடயங்களில் கவனம் செலுத்த வேண்டிய காலம் ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டினார்

இலங்கையை தன்னிறைவு அடைந்த நாடாக மாற்றவேண்டும் எனத் தெரிவித்த பிரதமர் விரைவாக நடவடிக்கைகளை மேற்கொண்டு பிள்ளைகளின் எதிர்காலத்தை சிறந்த முறையில் மாற்றியமைக்க வேண்டுமென்றும் தெரிவித்தார். (2-3)

### அவுஸ்திரேலியாவில்

# புலிகளுக்கு நிதி சேகரித்த 3 பேரிடம் விசாரணை

## அந்நாட்டு நீதிமன்றம் அதிருப்தி

விடுதலைப் புலிகளுக்கு நிதியுதவி வழங்கியதாக குற்றஞ்சாட்டப்பட்ட இலங்கையைச் சேர்ந்த மூன்று அவுஸ்திரேலியர்களுக்கு எதிராக பொலிஸார் நடத்திய விசாரணை தொடர்பில் அந்த நாட்டு உயர் நீதிமன்றம் அதிருப்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையைச் சேர்ந்த மூன்று அவுஸ்திரேலியர்கள் தொடர்பில் கடந்த இரண்டு வருடங்களாக அவுஸ்திரேலியப் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

இவர்களைக் கைதுசெய்யும் போதும் விசாரணைகளின் போதும் உரிய சட்ட விதிகள் பின்பற்றப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையைச் சேர்ந்த மூன்று அவுஸ்திரேலியர்களில் ஒருவரான ஆறுமுகம் ரஜீவனை பொர்லிஸார் துப்பாக்கிமுனையில் கைது செய்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

இலங்கையைச் சேர்ந்த மூன்று அவுஸ்திரேலியர்களும் கடந்த 2004 ஆம் ஆண்டுக்கும் 2007 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் விடுதலைப் புலிகளுக்கு நிதியுதவி வழங்கயதாக குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டிருந்தனர். (2-6)


புதிய சித்திர தேருக்கான நிரந்தர தரிப்பிடத்திற்கான

அடிக்கல் நாட்டு விழா



கே.என். டக்ளஸ் தேவானந்தா

காலம் :- 01.04.2010 வியாழன் மாலை 4.00-5.00மணி வரை
தலைவர்:- நா.துரை

பிரதம விருந்தினர்
கௌரவ அமைச்சர் :- கே.என் டக்ளஸ் தேவானந்தா
(சமூக சேவை சமூக நலத்துறை அமைச்சர்)

கௌரவ விருந்தினர்கள்
கௌரவ விருந்தினர்:-
✠ முருகேசு சந்திரகுமார் (அசோக்)
(முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்)
✠ திருமதி பற்குணராசா யோகேஸ்வரி
(முதல்வர் மாநகரசபை-யாழ்ப்பாணம்)
✠ சில்வேஸ்தரி அலன்ரின் ( S.A. உதயன்)
( யாழ். மாவட்ட அமைப்பாளர்)

சிறப்பு விருந்தினர்கள்
✠ அம்பலம் இரவீந்திரதாசன் (J.P)
(நல்லூர் பிரதேச அமைப்பாளர்கள்)
✠ சி.க.துரைசிங்கம்
(வலி தெ.பிரதேசசபை உறுப்பினர், சமாதான நீதவான்)

நிகழ்ச்சி நிரல்
☼ வரவேற்பு நிகழ்ச்சி ☼ தேவாரம்
☼ வரவேற்புரை ☼ தலைமை உரை

அடிக்கல் நாட்டல்
பிரதம விருந்தினர்,
கௌரவ அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா
(சமூக சேவை சமூக நலத்துறை அமைச்சர்)
அவர்களால் நாட்டப்படும்

✠ பிரதம விருந்தினர் உரை
✠ கௌரவ விருந்தினர்கள் உரை
✠ சிறப்பு விருந்தினர்கள் உரை
✠ நன்றியுரை



அம்பலம் இரவீந்திரதாசன்



திருமதி பற்குணராசா யோகேஸ்வரி



சில்வேஸ்தரி அலன்ரின் (S.A. உதயன்)



முருகேசு சந்திரகுமார் (அசோக்)

கோண்டாவில் பாரதிபுரம்

ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்

(993)

# எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான வாக்குச் சீட்டுக்கள் தயார் நிலையில்

## தேர்தல்கள் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான வாக்குச் சீட்டுக்கள் தயார் நிலையில் உள்ளதாக தேர்தல்கள் செயலகம் அறிவித்துள்ளது.


இதற்கமைய வாக்குச்சீட்டுக்கள் அச்சிடும் பணி அனைத்தும் பூர்த்தியடைந்துள்ளதுடன் அச்சிடப்பட்ட 22 மாவட்டங்களுக்குமான வாக்குச் சீட்டுக்களும் தேர்தல் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக மேலதிக தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

வாக்குச் சீட்டுக்கள் அச்சிடும் பணி கடந்த 4ஆம்திகதி அரசாங்க அச்சகத்தில் ஆரம்பிக்கப்பட்டு 29 ஆம் திகதி பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

மேலும் இம்முறை தேர்தலில் கூடுதலான வேட்பாளர்கள் போட்டியிடுவதால் வாக்குச் சீட்டுகள் அச்சிடுவதில் சற்று நெருக்கடி ஏற்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. (ஓ)

# அரசியல் முறையை மாற்றியமைக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும்

## ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

இந்த நாட்டின் அரசியல் முறையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என ஐ.தே.கட்சியின் தலைவர் ரணில்விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இராஜகிரியவில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து பேசிய ரணில் விக்கிரமசிங்க,

ஐ.தே.மு. கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்காகவே பெரும்பான்மைப் பலத்தைக் கோருவதாகவும் மக்களின் ஆணை கிடைத்ததும் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு மற்றைய கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்க திட்டமிட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

மக்கள் துன்பத்தை அனுபவிப்பதால் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட தயாராக இருப்பதாகவும் ஐ.தே. மு தலைவர் கூறினார்.

இந்த நாட்டின் அரசியல் முறையில் மாற்றதை ஏற்படுத்துவதற்காக அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது அவசியம் என ரணில் மேலும் தெரிவித்துள்ளார். (2-4)

# தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 229 முறைப்பாடுகள்

(கொழும்பு)

பொதுத் தேர்தலுடன் தொடர்புடைய தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் மற்றும் சட்டமீறல்கள் தொடர்பாக நேற்று பகல் வரை பொலிஸாருக்கு 229 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இது தொடர்பாக சந்தேகத்தின் பேரில் 188 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் காமினி நவரட்ண தெரிவித்துள்ளார்.

இதேவேளை பொதுத் தேர்தலுடன் தொடர்புடைய சட்டவிரோத பிரசார பதாகைகளை அகற்றும் பணிகள் மந்த கதியில் நடைபெறுவதாக தேர்தல் கண்காணிப்பாளர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

சட்டவிரோத பிரசாரப் பதாகைகள் அகற்றும் பணிகள் குறித்து திருப்தி அடைய முடியாது என தேசிய தேர்தல் கண்காணிப்பு நிலையத்தின் இணைப்பதிகாரி ரசாங்க கரிச்சந்திர குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் தேர்தல் பிரச்சார நடவடிக்கையின்போது சட்டவிரோதமாக காட்சிப்படுத்தப்பட்ட பதாகைகள் சுவரொட்டிகள் அகற்றும் பணிகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தற்போது இந்த நடவடிக்கைகள் பெரும்பாலும் பூர்த்தி செய்யப்பட்டு வருவதாக தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். (2-4)

# போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட 11 இலங்கையர்கள் குவைத்தில் கைது

(கொழும்பு)

போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட சந்தேகத்தின் பேரில் 11 இலங்கையர்கள் குவைத்தில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய் யப்பட்டவர்களில் 11 பேர் பெண்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் தண்டனை அனுபவித்து வருவோரில் ஒருவருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

கம்பளைப் பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவருக்கு குவைத் நீதிமன்றம் இவ்வாறு மரணதண்டனை விதித்துள்ளதாக தூதுவராலயத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் இவ்வாறு கைதுசெய்யப்பட்டு தண்டனை அனுபவித்து வருவோரை விடுதலைசெய்வதற்கும், போதைப்பொருள் வர்த்தகத்தை கட்டுப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. (2-6)


நாடாளுமன்றத்துக்கு நாளேடுகளில் ஒருவன்




ஐ.தே.க.வின் ஆட்சியில் ஏ-9 வீதி திறக்கப்பட்ட போது இராணுவ மற்றும் ஐ.சி.ஆர்.சி. அதிகாரிகளுடன் பேச்சு நடத்தும் மகேஸ்வரனுடன் ஸ்ரீகஜன்






குடாநாட்டு மக்களே வாக்குகளை வீணாக்காமல் யானைச் சின்னத்திற்கு நேரே ஒரு புள்ளடியையும் திருமதி விஜயகலா மகேஸ்வரனின் இலக்கமான 08 மற்றும் பத்திரிகையாளர் ஸ்ரீகஜனின் இலக்கமான 10 ஆகியவற்றுக்கு மேல் புள்ளடியிட்டு இருவரையும் அமோக வெற்றி பெறச் செய்வோம் !!!






திருமதி விஜயகலா மகேஸ்வரன்
(முதன்மை வேட்பாளர்)

யானைச் சின்னத்தில் யாழின் மைந்தன் - எஸ். ஸ்ரீகஜன்

(:4795)

# ஹார்ட்வெயர் இடத்தில் சொப்ட்வெயர்



கணனி வாங்கிப் பயன்படுத்தத் தொடங்கி சில மாதங்கள் அல்லது வருடங்கள் ஆன பின், சில சின்ன சின்ன விடயங்கள் உடைந்து செயல்படாமல் போகலாம். கீபோர்ட்டில் சில இயங்காமல் இருக்கலாம். மொனிட்டரின் பவர் ஸ்வீட்ச் உள்ளாக உடைந்து செயல்படாமல் தொல்லை கொடுக்கலாம். இது போன்ற பிரச்சினைகளில் நமக்கு சில சொப்ட்வெயர் தொகுப்புக்கள் கை கொடுக்கின்றன. அவற்றை இங்கு பார்க்கலாம்.

**மொனிட்டர் ஸ்விட்ச்:**

மொனிட்ரை நாம் நேரடியாக பவர் பிளக் அல்லது யு.பி.எஸ். பிளக்கில் இணைத்திருப்போம். கணனி வேலை முடியும் போது, மொனிட்டருக்கு வரும் மின்சாரத்தை நிறுத்த, மொனிட்டரை ஸ்விட்ச் ஒப் செய்திடுவோம். இதற்கான புஷ் பட்டன் ஸ்விட்ச் அனைத்து மொனிட்டர்களிலும் அதன் முன்புறத்தில் இருக்கும்.

இதன் தொடர் பயன்பாட்டால், இந்த ஸ்விட்ச் நாளடைவில் இயங்காமல் போய் விடும். அதற்காக நாம் வேறு மொனிட்டரை வாங்குவது வீண்செலவு. இந்த செயல்பாட்டினை மேற்கொள்ள ஒரு சொப்ட்வெயர் Monitor Off என்ற பெயரில் கிடைக்கிறது. இதன்மூலம் மவுஸ் கேர்சரை நகர்த்தியோ, அல்லது கீபோர்டில் ஒரு கீயை அழுத்தியோ மொனிட்டருக்கு வரும் மின்சக்தியை நிறுத்தலாம். கூடுதலாக இன்னும் பல வசதிகளையும் இது தருகிறது. இதனை சோதித்துப் பார்க்க இலவசமாய் டவுண்லோட் செய்திடலாம். இணையத்தள முகவரி: http:// www. rtsoftwares.com/utilities/TurnoffMonitor/setup.exe

**சிடி ரொம் டிரைவ் பட்டன்:**

அடுத்ததாக நமக்குத் தொல்லை தருவது சிடி ரொம் டிரைவின் பட்டன். பெரும்பாலான டிரைவ்களில் நமக்கு முதல் தொல்லை தருவது, சிடியினை வெளியே, உள்ளே கொண்டு வரும் பட்டன்தான். பலர் இந்த ட்ரேயினை மூடுகையில் தங்கள் கைகளாலேயே தள்ளிமூடுவார்கள். திறக்க மட்டுமே பட்டனைப் பயன்படுத்துவார்கள். இது நாளடைவில் பட்டனை முடக்கிவிடும். அப்போது கணனி சிடி டிரைவ் புரோபட்டிஸில் மெனுவில் எஜக்ட் பிரில் கிளிக் செய்து இதனைத் திறக்கலாம். ஆனால் மூடுவதற்கு பட்டன் வேலை செய்யவில்லை என்றால் , கைகளால் தான் மூடுகிறோம். இதற்கான ஒரு சொப்ட்வெயர் ட்ரே 2.5 என்ற பெயரில் கிடைக்கிறது. இந்த பைலின் அளவு 713 கேபி. இதனைப் பயன்படுத்தி ஒன்றுக்கு மேற்பட்ட டிரைவ்களின் கதவுகளை இயக்கலாம். இதனைப் பெற அணுகவேண்டிய இணைய முகவரி http:// www.softpedia.com/prog Download/Tray Download112476.html

**ஒன்லைன் ஸ்கிரீன் கீபோர்டு:**

இப்போது பல சொப்ட்வெயர் அப்ளிகேஷன்களில் ஒன் ஸ்கிரீன் கீபோர்ட் கிடைக்கிறது. இதில் மவுஸின் கேர்சரைக் கொண்டு சென்று கீபோர்டுக்குப் பதிலாகப் பயன்படுத்தலாம். இந்த வகையில் இன்னும் சில முன்னேற்றங்களுடன் Touchlt 4.3.03 (On Screen Keyboard) என்னும் சொப்ட்வெயர் கிடைக்கிறது. இதன் மூலம் கீபோர்ட்டுக்கான பல வசதிகளைப் பெறலாம். இதனைப் பெற இணையத்தில் http:// www.softpedia. com/progDownload/Touchlt Download 29438. html என்ற முகவரிக்குச் செல்லவும்.

**கீபோர்டு விளக்குகள்:** கீபோர்டில் நம் லொக், ஸ்குரோல் லொக்,முக்கியமாக கப்ஸ் லொக் அழுத்தப்பட்டிருக்கிறதா என்று அறிய, இந்த கீகளுக்கான சிறிய எல்.இ.டி.ஒளி கிடைக்கும்படி கீபோர்டில் தனி இடம் இருக்கும். நாளடைவில் இவை தங்கள் செயல்பாட்டை இழக்கும். இந்த விளக்குகளை மொனிட்டர் திரையிலேய காட்டும்படி சொப்ட்வெயர் ஒன்று கிடைக்கிறது. இதன் பெயர் டி.கே. கீபோர்டு (DK.Keyboard) இதனை இயக்கிவிட்டால், திரையில் சிறிய பொப் அப் பலூன் குமிழ் விளக்காக, இந்த கீகள் அழுத்தப்படும் போது ஒளிரும். இதனைப் பார்த்த பலரும் கீபோர்ட்ட நன்றாக இயங்கினாலும் இதனைப் பயன்படுத்தி வருகின்றனர். இதனைப் பெற http://www.softpedia. com/progDownload/DKKeyboard StatusDownload 96870. html என்ற முகவரியைப் பயன்படுத்தவும்.

**மவுஸ்:** உங்கள் மவுஸ் திடீரென உடைந்துபோய்விட்டதா? கீழே விழுவதனால் அல்லது தரையில் இருக்கையில் அதனை அறியாமல் மிதித்து விடுவதனால் உடையும் வாய்ப்புக்கள் உண்டு. இதனை இன்னொரு மவுஸ்தான் ஈடுகட்ட முடியும். இருப்பினும் அவசரத் தேவைக்கு, உங்களிடம் பழைய ஜாய் ஸ்டிக் அல்லது கேம் பாட் (Game pad) இருந்தால் அதனைப் பயன்படுத்தலாம். இதற்கான சொப்ட்வெயர் JMouse 1.0 இதனை இயக்கினால் அது இணைக்கப்பட்ட ஜாய் ஸ்டிக் அல்லது கேம் பாடினைப் புரிந்துகொண்டு மவுஸ் இயக்கத்தினைத் தருகிறது.இந்த சொப்ட்வெயர் http://www.softpedia.com/prog Download/ JMouse Download102151.html என்ற இணைய முகவரியில் இலவசமாகக் கிடைக்கிறது.



ஆர்.யூ.பாலமுருகன்

# விண்டோஸ் 7 டிப்ஸ்

**அறிவிப்பு வேண்டாமா?**

விண்டோஸ் 7 பயன்படுத்துபவர்கள் திரையின் வலது மூலையில் கீழாகத் திடீர் திடீரென சில அறிவிப்புக்கள் வருவதைப் பார்த்திருக்கலாம். உங்கள் நண்பரிடமிருந்து இமெயில் வந்திருப்பதாக, விண்டோஸ் ஒரு அப்டேட் பைலை டவுண்லோட் செய்துகொண்டிருப்பதாக - இப்படி பல செய்திகள் பொப் அப் ஆகிவரும்.

இவை எல்லாம் எதுக்காக வருகின்றன? எனக்கு இவை ஒன்றும் அவ்வளவு முக்கியமில்லையே. பார்க்கும் வேலைக்கு இடையூறாக இருப்பதாக நீங்கள் நினைக்கிறீர்களா? இவற்றை விலக்கி வைத்திடவும் செட்டிங் மேற்கொள்ளலாம்.

உங்களுடைய டாஸ்க்பாரில் ரைட் கிளிக் செய்திடவும். டாஸ்க்பார் டப்பின் கீழாக நோட்டிபிகேஷன் ஏரியா (Notification Area) என்று ஒரு பிரிவு இருக்கும்.



இதில் கஸ்டமைஸ் (Customize)என்ற பட்டனைக் கிளிக் செய்திடவும்.இதில் கிடைக்கும் பிரிவுகள் மூலம் எப்போது உங்களுக்கு இந்த அறிவிப்புக்கள் வேண்டும் என்பதனை வரையறை செய்து கொள்ளலாம்.நீங்கள் விரும்பியபடி இவற்றை அமைத்துவிட்டு ஓகே கிளிக் செய்து வெளியேறலாம்.

**பைல் செக் பொக்ஸ்**

விண்டோஸ் 7 சிஸ்டத்தில் எப்படி பைல்களை செலக்ட் செய்கிறீர்கள்? அப்படியே பைல்களைச் சுற்றி ஒரு கட்டம் எழுப்பி செலக்கட் செய்கின்றீர்களா? அல்லது கொண்ட்ரோல் அழுத்திக் கொண்டு தேவையான பைல்களின் மீது கிளிக் ஏற்படுத்துகிறீர்களா? அல்லது செக் பொக்ஸ் மீது டிக் அடையாளம் உண்டாக்குகிறீர்களா?

அதென்ன செக் பொக்ஸ் டிக் என்று உடனே நீங்கள் எண்ணுவது தெரிகிறது. மேலும் படியுங்கள்.

விண்டோஸ் எக்ஸ்புளோரரில் ஓர்கைனைஸ் (Organize) என்னும் பட்டன் உள்ளது. இடதுபுறம் மேலாக இது காணப்படும். இதில் கிளிக் செய்து பின் கிடைக்கும் விண்டோவில் Folder and Search Options என்பதைத் தேர்ந்தெடுக்கவும். இனி தோன்றும் விண்டோவில் View என்ற டேப்பில் கிளிக் செய்திடவும்.

அடுத்து Advanced Settings என்பதன் கீழ், கீழாக ஸ்குரோல் செய்துவந்தால் Use Check boxes to select items என்று ஒரு வரி கிடைக்கும். இதன் எதிரே உள்ள சிறிய கட்டத்தில் டிக் அடையாளம் ஏற்படுத்தவும்.

இனி எந்த பைல் பெயரின் மீது நீங்கள் உங்கள் கேர்சரைக் கொண்டு சென்றாலும் ஒரு செக் பொக்ஸ் ஐகனில் கிடைக்கும். இதில் செலக்ட் செய்வதன் மூலம் பைலைத் தேர்ந்தெடுக்கலாம்.

# படங்களுக்கு மெருகூட்ட இமேஜ் டூல்ஸ்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

**ஸ்பீச் பப்பிள்ஸ் (Speech bubbles)**

சித்திரக் கதை பார்த்திருப்பீர்கள். குழந்தைகளாய் இருக்கும்போது இவற்றைப் பார்த்து ரசிக்காமல் இருந்திருக்கமாட்டோம். வளர்ந்த பின்னர் இந்தப் படங்களுக்குப் பதிலாக நம் போட்டோக்களை வைத்து ஏன் அமைக்கக் கூடாது என்ற ஆர்வம் வந்திருக்கும்.நம் குழந்தைகளின் படங்களையே வைத்து அமைக்கலாமே என்று ஆசைப் பட்டிருக்கலாம். அப்படியானால் படங்களுக்கான வசனங்களைத் தயார் செய்து அவற்றைப் படங்களுக்கு மேலாகக் குமிழ்களை உருவாக்கி அமைக்க வேண்டுமே!

உங்களின் இந்த ஆசைகளுக்காகவே ஒரு தளம் உள்ளது. http://speechable. com/ என்ற முகவரியில் உள்ள தளம் இந்த வசதியை அமைக்க உங்களுக்கு உதவுகிறது. அமைய இருக்கின்ற டெக்ஸ்ட் மற்றும் பப்பிள் சைஸ் ஆகியவற்றை வரையறை செய்து அமைத்தால் போதும். படம் மாற்றப் பட்டு கிடைக்கும்.

**வாட்டர் எபக்ட் (Water Effect)**

சில ஆழமான நீர்நிலைக் காட்சிகளைப் பார்த்திருப்பீர்கள். அருகே இருக்கும் மரங் கள், பறவைகள், வானத்தில் உள்ள நிலா ஆகிய எல்லாம் அப்படியே பிம்பங்களாக நீர் அலைகளில் உருவத்தை ஒட்டி தலைகீழாகக் காட்டப்பட்டு அழகாக இருக்கும். நம் உரு வங்களை இப்படிப் பார்க்க வேண்டுமே என்ற ஆவல் உள்ளதா? இதற்காக நாம் நீர் நிலை களைத் தேடி, ஒளி சரியாகப்பட்டு, பிம்பங்கள் அசையாத நிலைக்குக் காத்திருந்து பின் போட்டோ எடுப்பது என்பது நிச்சயம் அனைவருக்கும் கை கூடாது.

ஏற்கனவே எடுத்த போட்டோக்களுக்கு இந்த எபக்ட் தருவதற்கான ஒரு தளம் உள்ளது.அதன் முகவரி http://www. watereffect.net/ இந்த இணைய தளம் சென்று, எந்தப் படத்திற்கு இந்த தலைகீழ் தண்ணீர் உருவம் வேண்டும் என எண்ணுகிறீர்களோ, அதனை அப்லோட் செய்திடவும்.

ஓரிரு நிமிடங் களில் நீர் அருகே படத்தில் உள்ளவர்கள் இருந்தால் எப்படி காட்சி இருக்குமோ, அந்த வகையில் போட்டோ கிடைக்கும்.


அந்தத் தளத்தில் போட்டோ இருக்கும் வரை, நீர் அசைவது போலவும், அதில் தெரியும் உருவப் பிம்பங்களும் அப்படியே அலை அலையாய் இருப்பது போலவும் காட்சி இருக்கும். அதை காப்பி செய்து நம் கம்ப்யூட்டரில் சேவ் செய்திட்டால் இந்த அனிமேஷன் இல்லாமல், பிம்பங்களுடன் போட்டோ இருக்கும்.

**வளைவுகள் அமைக்க (Round Pic)**

உங்கள் படங்களின் மூலைகளில் அழகான வளைவுகள் அமைக்க வேண்டுமா? நீங்கள் எந்தப் படத்தை அப்லோட் செய்தாலும், அதன் ஓரங்களை வளைவுகளுடன் அமைத்துத் தருகிறது இந்தத் தளம். வளைவுகள் எந்த அளவில் இருக்க வேண்டும் என்பதை செட் செய்து, படத்தை அப்லோட் செய்திட்டால், படத்தின் காட்சி பிரிவியூவாகக் கிடைக்கும். உங்களுக்குப் பிடித்திருந்தால் ஓகே கொடுத்து படத்தைப் பெறலாம். இந்தத் தளத்தின் முகவரி http:// www.roundpic.com/

**வேடிக்கையான படம் (Be Funky)**

உங்கள் படங்களுக்கு டிஜிட்டல் பெயிண்ட் அடிக்க வேண்டுமா அல்லது அவற்றைக் காட்டூன் படங்களைப் போல அமைக்க வேண்டுமா! http://www. be funky.com/ என்ற முகவரியில் உள்ள தளம் செல்லவும்.






படத்தைத் திறந்து, எந்த மூலையையும் இழுக்கவும். பலவகை பின்னணி மற்றும் துணை சாதன வசதி களைப் பயன்படுத்தி கார்ட்டூன் வகையில் படத்தை மாற்றவும்.


உங்கள் படங்களை மை, பென்சில் போன்றவற்றில் வரைந்தது போலவும் மாற்றலாம். இந்தத் தளத்தில் வீடி யோக் களுக்கு கார்ட்டூன் எபக்ட் தர முடியும். (முற்றும்)

# பொதுத் தேர்தல்-2010

## யாழ்ப்பாண மாவட்டம்


அப்பாத்துரை விநாயகமூர்த்தி
இல.01


ஐங்கரநேசன் பொன்னுத்துரை
இல.02



சுரேஷ்பிரேமச்சந்திரன்
இல.03


நடேசு இராசேந்திரன்
இல.04



இராசரத்தினம் சிவசந்திரன்
இல.05


ஈஸ்வரபாதம் சரவணபவன்
இல.06


அன்பான உறவுகளே!
இன்று தமிழ் மக்களின் இருப்புக்கு பாதுகாப்பு அரணாக இருக்கும் அரசியல் சக்தி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே!
அரசியல் அனுபவம், சாணக்கியம் மிக்கவர்களால் வழி நடத்தப்படும் அமைப்பு த.தே.கூட்டமைப்பு!
வடகிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தின் ஐந்து மாவட்டங்களிலும் வேட்பாளர்களை நிறுத்தியுள்ள
ஒரேஒரு தமிழ்க் கட்சி த.தே.கூட்டமைப்பு!
தமிழ் மக்களின் தாயகம், தேசியம், தன்னாட்சியுரிமை, இறைமை
ஆகிய அடிப்படை அரசியல் தீர்வுகளை இன்றைய சூழலில் முன்னெடுக்க, ஒரு வலுவுள்ள அரசியல்
அமைப்பு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மட்டும்தான் என்பதை ஈழம் வாழ் எமது உறவுகளும் புலம்பெயர் தமிழர்களும் நன்கு உணர்கின்றனர்.
ஈழத்தமிழர்களின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் வலுவும் ஆற்றலுமுள்ள கட்சி த.தே.கூட்டமைப்பே!
தந்தை செல்வா உருவாக்கி வளர்த்து வந்த தமிழ்-முஸ்லீம் மக்களிடையேயான நல்லுறவை வளர்த்துவரும் தலைவர் திருமலை திரு.இரா சம்பந்தன் அவர்களின் தலைமையை வடகிழக்கு வாழ் தமிழ்பேசும் மக்கள் வரவேற்கின்றனர்.
உடன் பிறப்புக்களே! இவ்வரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாது உங்கள பொன்னான வாக்குகளை வீட்டுச் சின்னத்திற்கு எதிரே புள்ளடியிட்டு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை அமோக வெற்றிபெறச் செய்து அரசின் சூழ்ச்சித் திட்டங்களை முறியடியுங்கள். கூட்டமைப்பை வெற்றிபெறச் செய்யுங்கள். முதலில் உங்கள் வாக்கை வீட்டுக்கு நேரே புள்ளடியிடுங்கள்.
அடுத்து உங்களுக்குரிய விருப்பு வாக்குகள் மூன்றையும் நீங்கள் விரும்பும் மூன்று வேட்பாளர்களுக்கு அளிக்கத் தவறாதீர்கள்.



**அன்புடன் பிரித்தானிய வாழ் தமிழ் மக்கள்.**



கந்தையா அருந்தவபாலன்
இல.07


மாவை சேனாதிராஜா
இல.08


முடியப்பு றெமிடியஸ்
இல.09


சிவஞானம் சிறிதரன்
இல.10


சீ.வீ.கே.சிவஞானம்
இல.11


சேவியர் குலநாயகம்
இல.12

(681)

# மூலபண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே

சுவாமிகள் தம்மைச் சூழ்ந்த திருக் கூட்டத்தினருக்கு அவரவர்க்கு அது வதுவாய் நின்று அருள்சொரிந்தார். அவரி டம் வந்த அனைவரும் தாம் ஏந்திய பாத்திரத்தின் கொள்ளளவிற்குத்தக்க அருளமுதத்தைப் பெற்றனர். அவர் சில ருக்கு வாக்கியப்பிரசாதம் ஈந்தார். அப் பிரசாதம் அருன்நனி சுரக்கும் அமுத கீதங்களாகவும், இருந்தன; ஓரிரு சொற் களான சின்மொழிகளாகவும் இருந்தன. நாங்கள் பரிசுத்தரும் தெய்வத்துள் வைக கப்பட்டவர்களாகவும் இருக்கிறோம். எங் களுக்குள் ஒரு மாறுபாடும் இல்லை. நாங்கள் எல்லாம் ஒரே ஆள். இதுவே நமது உண்மைச் சுபாவம்! வித்தி யாசங்கள் எல்லாம் உண்மைச் சுபா வத்தின் சிறப்புக்கள். அவற்றால் ஒரு குறையுமில்லை. கடவுளால் ஒன்றும் செய்ய முடியாது; அவரால் நம்மைப் பிரிந்தி ருக்கமுடியாது; இந்தக் குழந்தைக் கும் எனக்கும் ஒரு வயது என்றவண் ணம் எளிதாய் எவர்க்கும் இன்னுரை சொன்னார்.

அவர் தெய்வத்தோடு நமக்குள்ள சம்பந்தத்தை நினைவூட்டிய வண்ணம் தாம் ஒரு நடமாடுந் தெய்வமாகத் திரிந் தார். எங்கும் மங்களம் தங்கு என்று செப்பிக்கொண்டு எங்கும் திரிந்தார். அதனால் யாழ்ப்பாணம் எங்கும் திரு வும், கல்வியும் சீரும் தழைத்தன. ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் யாழ்ப்பாணத் தார் கல்வி, செல்லுகைக்கு, உத்தி யோகம் ஆகியவற்றில் முன்னணியின ராய் நின்றதன் இரகசியம் இதுவே. தெப் பத்தின் அமைதியான செலவுக்கு, சீரான ஆற்று நீரோட்டம் ஆதாரமாவதுபோல நம்மவரின் வள வாழ்வுக்கு நற்சிந்தனை என்னும் நறுமலர்சேர் கற்பகதரு என எங்கள் சுவாமிகள் உலவியது ஆதாரமாயிற்று. இந்த அருளாதார நுட்பம் நூலறிவா ளரால் நுணுகியும் காணொணாதது. திறவோர் காட்சியில் கையில் நெல் லிக்கனியெனத் தெரிவது.

சுவாமிகள் தாம் திருவடிக்கலப் புறுவதற்குப் பத்து ஆண்டுகளுக்கு முன் சிவதொண்டன் நிலையத்தை நிறுவி னார். இதுபற்றிப் பின்னர் தம் அன்பர்களி டம் கூறியபோது தனக்குப் பின் தன்னை நம்பினோர் தறிகெட்டுப் போகாதிருத்தற் பொருட்டு இதனை நிறுவியதாகக் குறிப் பிட்டார். சிவதொண்டன் நிலையத்துக் குறிக்கோள் மௌனமாயிருந்து இளைப் பாறுதல்.

மாந்தர் வெய்ய புவிபார்த்து விழித் திருந்து துயரகல ஆறியிருக்கும் இணை யடி நிழலாக இந்நிலையம் அமைந்தி ருக்கின்றது. இதன் பொருட்டே சுவாமி கள் 'திருவடி'யைப் பிரதிட்டை செய்த னர்.

மௌனமாகத் தியானத்தமர்ந்தி ருத்தற்கு ஏதுவான பூசனை முறையை யும், எளிமையான விழாக்கள் சிலவற் றையும் நியமஞ் செய்தார். இத்தவச் சாலையிலே தன்னையறியத் தவமியற்று வோருக்குத் தடையேதும் நிகழாதிருத் தற்பொருட்டு கண்டிப்பான நடைமுறை கள் சிலவற்றை ஏற்படுத்தினார். அவர் தம் திருவுளப்படி இந்த நடைமுறைக ளைப் பேணுதற்பொருட்டிருக்கும் பொறுப்பாளர் கயிலைப்பதியிலிருக்கும் நந்தியம் பெருமானைப் போன்று பணி செய்தல் வேண்டும். இவ்வண்ணம் உன னதமான குறிக்கோளையும், அக்குறிக் கோளை அடைதற்கான நியமங்களை யும், இவற்றைப் பேணும் கண்டிப்பான நடைமுறைகளையும் ஏற்படுத்திய பின் தம்மைத் தரிசிக்கக் கொழும்புத்துறைக்கு வருவோரிடம் "இங்கு ஏன் வருகிறீர்கள் சிவதொண்டன் நிலையத்திற்குச் சென்று நன்றாக தியானஞ் செய்யுங் கள்" என்று கூறினார்.


தக்கவர்களைப் பார்த்துத் தான் சிவ தொண்டன் நிலையத்தில் இருப்பதாயும் அங்கு தியானஞ் செய்வோர் அனைவ ருடனும் கூட இருப்பதாயும் கூறியருளி னார். தியான மண்டபத்திற்கு ஏறிச் செல லும் படிகளில் குண்டலினி சக்தியிருப் பதாயும் கூறினார்.

அவர் திருவடிக் கலப்புறுவதற்கு முந திய ஓராண்டு காலத்தில் தியான மண்ட பத்திலே திருவடி வீற்றிருக்கும் இடத் திற்கு நேரே கீழிருக்கும் அறையில் இடை யிடையே வந்து உறைந்தார். அவ்வறை யிலேதான் பேராசிரியர் ரி. எம்.பி. மகா தேவன் முதலாய தத்துவப்புலவர்கள் சுவா மிகளைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்ற னர்.

யோகர்சுவாமிகள் நல்லைத்தேரடி யில் சிவயோகத்தில் பொருந்தியது போல செல்லத்துரை சுவாமிகள் சிவயோகத் திற் பொருந்திய இடம் சுவாமிகள் உறை ந்த அவ்வறையேயாம்.

ஆகவே யாழ்ப்பாணம் முழுவதற்கும் சோதிப் பிரகாசமளிக்கும் ஞானச்சுடர் விளக்காகச் சிவதொண்டன் நிலையம் ஒளிர்கிறது.

இந்நிலையத்திலே சுவாமிகளது நாற்பத்தாறாவது குருபூசை தினமான



கடந்த வெள்ளிக்கிழமையை ஈறாகக் கொண்டு மூன்று நாட்கள் அடியார்கள் ஆச்சிரம வாழ்வு வாழ்ந்து நற்சிந்தனை முற்றோதல் செய்தனர்.

குருபூசை தினத்தன்று விசேட அபி டேக ஆராதனைகளும் இடம்பெற்றன.

## சிவதொண்டன் சபையார்

தியான மண்டபத்தில் திருவடியாக வீற் றிருக்கும் சுவாமிகள் மண்ணாகச் செய் யும் இம் மண்ணுலகிலே பிறந்து வெய்ய புவி பார்த்து இளைத்துப் போயிருக்கும் அடியார்களுக்கிரங்கி தியான மண் டபத்து படி வழியே இறங்கி வந்து புராண மண்டபத்தில் வீற்றிருந்து அடியார்களின் பூசனை கொண்டு கற்பக தரு வென வேண்டுவார் வேண்டுவதை அருளுகின்றார். (முற்றும்)

# பயங்கரவாதத்தை எதிர்க்க தாம் ரஷ்யாவுக்கு உதவ தயார்

## ஜனாதிபதி தெரிவிப்பு

ரஷ்யாவில் தொடர்ந்து இடம்பெற்று வரும் பயங்கரவாத யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வர அந்நாட்டிற்கு உதவுவதற்கு இலங்கை தயாராக இருப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ரஷ்ய ஜனாதிபதி திமிட்ரி மெட்வவேட்வுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்தில் நேற்று முன்தினம் ரஷ் யாவில் இரண்டு பெண் குண்டுதாரிகள் நடாத்திய தற்கொலை தாக்குதலில் பலர் கொல்லப்பட்டமை குறித்து ஜனாதிபதி தமது கவலையை வெளியிட்டுள்ளார்.

30 வருடங்களாக பயங்கரவாதத்தினால் பாதிக்கப்பட்ட என்ற நாடு என்ற வகையில் இலங்கை இந்த தாக்குதலின் பாதிப்பை உணர்வதாக அந்தக் கடிதத்தில் குறிப் பிட்டுள்ளார்.

இந்தநிலையில் பயங்கரவாதத்தை தோற கடித்த நாடு என்ற வகையில் ரஷ்யாவுக்கு உதவ தயார் என்றும் அவர் தெரிவித்துள் ளார். (2-6)

# யாழ்ப்பாணம் - பூநகரி படகு சேவை அரசாங்கம் நடத்தவுள்ளது

இலங்கை அரசாங்க உத்தியோகத்தர் களின் நன்மைகருதி யாழ்ப்பாணத்திற்கும் பூநகரிக்கும் இடையிலான படகு சேவை யொன்றை அரசாங்கம் விரைவில் நடத்தவுள் ளது என வட மாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திர சிறி கூறினார்.

யாழ்ப்பாணத்திற்கும் பூநகரிக்கும் இடை யிலான படகுச் சேவையினை ஆரம்பிக்கும் வகையில் அதற்கான ஆரம்பகட்ட பணிகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன.

பேருந்து வழிப் பயணத்தைப் போலல்லா மல் இந்தப் படகுப் பயணமானது நேரத்தினை மீதப்படுத்துவதோடு களைப்பற்ற பயணமாக வும் அமையும் என அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலிருந்து பூநகரிக்கு பேருந்து வழியாகப் பயணிக்க் வேண்டுமெ னில் ஆகக்குறைந்தது இரண்டு மணி நேர மாவது தேவைப்படும்.


இங்கிருந்து ஆனையிறவு, பரந்தன், ஜெயபுரம் ஊடாக பூநகரி நோக்கியே பயணி கள் பயணம் செய்ய வேண்டியுள்ளது.

எனவே ஆசிரியர்கள், மருத்துவமனைப் பணியாளர்கள், நகரசபைப் பணியாளர்கள் மற்றும் மாகாணசபையினைச் சேர்ந்த பணியாளர்கள் எனப் பலதரப்பட்டோர் இந்தச் சேவையினால் பயன்பெறவுள்ளார்கள்.

யாழ்ப்பாண மற்றும் பூநகரி கடல் தொழி லாளர் சங்கங்கள் படகுச் சேவைக்கான ஒத்து ழைப்பினை வழங்கவுள்ளார்கள் என தெரி விக்கப்படுகிறது. (2-6)





வடக்கின் வசந்தம் அபிவிருத்திக்கடன் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்ட மக்கள் வங்கிக் கிளைகளினால் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான உபகரணங்கள்,உழவு இயந்திரங்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், கணனிகள் வழங்கும் வைபவம் மக்கள் வங்கி, யாழ். ஸ்ரான்லி வீதிக்கிளையில் அண்மையில் நடைபெற்றது. மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் டீரசிங்க, ஜனாதிபதியின் வங்கித்துறை ஆலோசகர் கலாநிதி திருமதி ராணி ஜெயமகா ஆகியோர் பயனாளிகளுக்கு பொருட்களை வழங்குவதையும் அருகில் மக்கள் வங்கியின் வடவலய உதவிப் பொதுமுகாமையாளர் த.க. ஆனந்தராசா, பிராந்திய முகாமையாளர் சி. பத்மநாதன் மற்றும் வங்கி உத்தியோகத்தர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம்.

# எமது தேசியச் சூழலை நல்லாட்சி செய்யும் அரசியல் அதிகாரம் எம்மிடமே இருக்க வேண்டும்

"பேரினவாத அரசியல் தேசியம் என்ற சொல்லின் அர்த்தப் பரிமாணங்களை முழுமையாக உணர்ந்து கொள்ளாத அல்லது உணர மறுக்கின்ற நிலையே தொடர்ந்தும் நீடிக்கிறது. சிங்கள மக்கள் ஒரு தேசிய இனம். அவர்கள் வாழ்ந்து வருகின்ற தென் இலங்கையின் சுற்றுச் சூழல் அவர்களது தேசியச் சூழல் (National Environment). அதே போன்றுதான் இலங்கைத் தீவின் பூர்வீக குடிகளான தமிழ்மக்களும் தனித்த ஒரு தேசிய இனம். எமக்கெனத் தனித்துவமான பண்பாடும், செழுமையான மொழியும் உண்டு. நாம் பாரம்பரியமாக வாழ்ந்து வருகின்ற வடக்கு- கிழக்கு இணைந்த நிலப்பரப்பு எமது தாயகம். இங்கு காணப்படக்கூடிய தாவர, விலங்கு இனங்கள் மற்றும் இயற்கை வளங்கள் எல்லாம் சேர்ந்து எமது தேசியச் சூழல். இரண்டு தேசியச் சூழல்களுமே உயிரினங்களின், இயற்கை வளங்களின் பல்வகைமையிலும் பகிர்மானத்திலும் வேறுபட்டவை. இலங்கை அரசு தேசிய மரமாகக் கொண்டாடும் மெசுவா (Mesua) மரம் தமிழ்த் தேசியச் சூழலில் இல்லை. இந்த மரம் பற்றிய பூரண அறிவு எமக்குக் கிடையாது. எமது பனைமரத்தின் பெறுமதி சிங்கள தேசத்துக்குத் தெரிந்திருந்தால் தென்மராட்சியில் பனைவளம் எறிகணைகளால் பேரழிவைச் சந்தித்திருக்காது.

ஒவ்வொரு தேசிய இனமும் அதன் தேசியச் சூழலுடன், இரத்தமும் சதையும் என்பார்களே அதுபோல ஒரு அங்கமாகச் சேர்ந்தே பரிணாமித்து வந்துள்ளது. இதனால் ஒரு தேசிய இனத்துக்கு அதன் தேசியச் சூழல் குறித்தே பூரணமான புரிதல் இருக்கமுடியும். இதன் அடிப்படையிலேயே, எமது தேசியச் சூழலை நல்லாட்சி செய்யும் அரசியல் அதிகாரம் எம்மிடமே இருக்க வேண்டும் என்கிறோம். அப்போதுதான் எமது இயற்கையின் வளமும் அளவும் குன்றாத அக்கறையுடன் அபிவிருத்தியை முன்னெடுக்க முடியும். மாறாக, வேறுபட்ட பண்பாட்டையும் மொழியையும் கொண்ட ஒரு பேரினவாதத் தேசிய இனம், அதுவும் இன்றைய உலகமயமாக்கல் நிலையில் எம்மை ஆளுகை செய்யின் அது எமது வளங்களைச் சூறையாடுவதாகவே அமையும். இயற்கை அழிந்தால் இயற்கையால் நாமும் அழிவோம் என்பதுதானே சூழலியல் நியதி."

பொ. ஐங்கரநேசன் அவர்கள்
வழங்கிய நேர்காணலில் இருந்து......



போரினால் சிதைக்கப்பட்ட தாயகத்தின் இயற்கை வளங்கள் இப்போது, அபிவிருத்தியின் பெயராலும் சூறையாடப்படுகின்றது.

இந்நிலையில்,

**தமிழ்த் தேசிய அரசியலில் ஒரு சூழலியலாளனும் தேவை.**

## பொ.ஐங்கரநேசன்

M.Sc,PGDJMC

வீட்டுச் சின்னத்துக்கு நேரேயும்,
இலக்கம் 2க்கு மேலேயும் புள்ளடி இட்டு
பெரும் எண்ணிக்கையான வாக்குகளால்
வெற்றிபெறச் செய்வோம்

(B-4896)

## இலங்கைத் தமிழரசுக் கட்சி

X

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 X | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |

**வாக்களிப்போம்! மற்றவர்களையும் வாக்களிக்க வைப்போம்!!**

# அரச படைகளும், விடுதலைப்புலிகளும் யுத்தத்தை உடன் நிறுத்த வேண்டும்

**தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி 10.08.2008 அன்று ஊடகங்கள் மூலமாக விடுத்த பகிரங்க வேண்டுகோள்**



முல்லைத்தீவு வைத்தியசாலைக்கு அண்மையில் இராணுவம் மேற்கொண்ட செல்தாக்குதலால் ஒன்றரைவயது குழந்தையை பலி கொண்டதோடு 18 அப்பாவி பொது மக்களும் படுகாயமடைந்துள்ளனர். அதைத் தொடர்ந்து இடம்பெற்ற இன்னுமொரு சம்பவத்தில் இருவர் கொல்லப்பட்டதாகவும் சில வீடுகள் சேதத்துக்குள்ளானதாகவும் அறிய வருகிறது. இதே போன்ற சந்தர்ப்பத்தில் ஒரு குழந்தையை அல்லது தமது உறவினர் ஒருவரை இழப்பவர் களாலேயே இந்த இழப்பின் வேதனையை உணர முடியும். இவ்வாறு பாதிக்கப் பட்டவர்கள் யார்? விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அகப்பட்டுக் கொண்டார்கள் என்பதைத் தவிர இவர்கள் சமூகத்திற்கு செய்த குற்றம் என்ன? இவ்வாறு துன்பப்படும் மக்களின் துன்பத்தை போக்கி நிம்மதி பெரு மூச்சுவிட வைக்க முடியாதுவிட் டால் நாம் பௌத்த தர்மத்திற்கு கட்டுப்பட்டு வாழ்கிறோம் என்று எவ்வாறு கூற முடியும். எது நடப் பினும் யுத்தம் தொடர வேண்டுமென்று வாதாடுகின்றவர்கள் இன்னும் நம் நாட்டில் வாழ்கின்றார்கள். இனப்பிரச்சினை தீர்விற்கு தொடர்ந்தும் முட்டுக் கட்டையாக இருப்பவர்களும் அவர்களே.

துரதிஷ்டவசமாக நம் நாட்டின் நிலைமை இது தான். இந் நாட்டையும் அந் நாட்டின் மக்களையும் நேசிக்கும் நாட்டுப்பற்றாளனாகிய நான் ஓர் உயிரைத்தன்னும் வீணாக இழக்க விரும்ப வில்லை. நம் நாட்டில் சரியாக கணிப்பிடின் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்டவர்கள் பலியாகியுள்ளார்கள். அரச படைகளுக்கும் விடு தலைப்புலிகளுக்கும் இடையில் நடக்கின்ற இந்த யுத்தத்தில் 50 வீதத்திற்கு மேற்பட்டவர்கள் வட கிழக்கில் இடம் பெயர்ந்து பல துன்பங்களை அனுபவித்துள்ளனர். முறையான உணவு, உடை, இருப்பிடம், சுகாதார வசதி அன்றி வாழ்வதோடு தமது சொத்துக்களை முற்றாக இழந்தும் உள்ளனர். இவர்கள் அனைவரும் அப்பாவி பொது மக்களே. விடுதலைப் புலிகள் தமிழ் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற முடியாது என நன்கு அறிந்தும் உண்மை நிலையை நேர்மையாக மக்களுக்கு தெரிவித்து ஒரு தலைபட்சமாகவேனும் யுத்த நிறுத்தத்தை பிரகடனப்படுத்தி ஆயுதங்களை கைவிட்டு ஜனநாயக பாதைக்கு திரும்ப வேண்டும். அதே போன்று அரசும் செயற்பட்டு விமானத் தாக்குதலை கட்டுப்படுத்த வேண்டும். விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டுடன் செயற்படாத பட்சத்தில் அவர்கள் இழப்பதற்கு எதுவும் இல்லை. ஆனால் அரசாங்கம் தம் மக்கள் எப்பகுதியிலும் வாழ்ந்தாலும் அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க தவறுமேயானால் அரசாங்கம் தனது மதிப்பை இழந்து விடும்.

மிக விரைவில் கிளிநொச்சியிலும் மக்கள் இடம்பெயர வேண்டிய நிலைமை உருவாகும். ஏற்கனவே பல்வேறு இடங்களில் இடம்பெயர்ந்த மக்கள் பலாத்காரமாக கிளிநொச்சிப் பகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளனர். பல்லாயிரக்கணக்கான இடம் பெயர்ந்தவர்களுக்கு தங்குமிடம், உணவு, சுகாதார வசதி ஆகியவை செய்யப்பட வேண்டும். அதேவேளை விடுதலைப்புலிகள் தமது இரும்புக் கதவை திறந்து மக்கள் தம் இஷ்டம்போல் அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு பிரவேசிக்க அனுமதிக்க வேண்டும். குடாநாட்டில் இருந்து வன்னியில் பலாத்காரமாக குடியேற்றப்பட்டவர்கள் அனுமதி வழங்கப்பட்டால் தம் சொந்த வீடுகளுக்கே திரும்பிச் செல்லும் வாய்ப்பு உண்டு. அதே போன்று அரசும் விடுதலைப்புலிகளின் பிரதேசத்திலிருந்து தப்பி வரும் மக்கள் தமது பகுதியை வந்தடைய ஏதுவாக ஆதரித்து உதவ வேண்டும்.

ஆகவே யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இரு பகுதியினரும் கட்டுப்பாட்டுடன் செயல்பட வேண்டும். இக்கட்டான இக்கட்டத்தில் சில தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் வெளிநாடு செல்வதற்கு தொடர்ந்தும் பிறநாட்டில் சுற்றுலா செய்வதற்கும் ஏதுவாக அண்மையில் பாராளுமன்றத்தில் மூன்றுமாதகால விடுமுறை கேட்டுப் பெற்றமை கண்டிக்கப்படவேண்டும்.

வீ. ஆனந்தசங்கரி
தலைவர்- த.வி.கூ

(சி-4890)

தமிழ் மக்களின் பிரச்சினையை
துணிச்சலுடன் உலகறியச் செய்த
மூத்த அரசியல் தலைவர் வீ.ஆனந்தசங்கரிக்கு
உங்கள் வாக்கை அளியுங்கள்.

தமிழர் விடுதலைக் கூட்டணி

# இலங்கையின் தற்போதைய பாராளுமன்றத் தேர்தல் முறை

## ஓர் கண்ணோட்டம் 4



### வாக்கு எண்ணல்

யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் அஞ்சல் வாக்களிப்பு நிலையத்தை விட மொத்தம் 624 வாக்களிப்பு நிலையங்கள் உள்ளன. இவற்றை விட மாவட்டத்திற்கு வெளியே இடம்பெயர்ந்தோருக்காக வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளது.

யாழ். தேர்தல் மாவட்டத்தில் உள்ள வாக்கு அளிப்பு நிலையங்களில் உள்ள சகல வாக்குப் பெட்டிகளும் யாழ் செயலகத்தில் அல்லது ஒதுக்கப்பட்ட வேறு இடங்களில் உள்ள வாக்கு எண்ணும் நிலையங்களில் ஒப்படைக்கப்படும். பொதுவாக வாக்கு எண்ணுதல் பழைய தேர்தல் தொகுதி அடிப்படையிலேயே நடைபெறும்.

இவ்வாறு சிரேஸ்ட தலைமை தாங்கும் அலுவலர்களால் ஒப்படைக்கப்பட்டு பொறுப்பேற்றுக் கொண்ட அலுவலர் தமது பாதுகாப்பில் வாக்குப் பெட்டிகளை வைத்துக் கொள்வார். (மாவட்டத்திற்கு வெளியே உள்ள வாக்குப் பெட்டிகள் சம்பந்தப்பட்ட மாவட்டச் செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டு வாக்குகள் எண்ணப்பட்டு பெறுபேறுகள் மட்டுமே யாழ் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அறிவிக்கப்படும்). யாழ் தேர்தல் மாவட்டத்தில் உள்ள வாக்குப் பெட்டிகள் முறையாக ஒப்படைக்கப்பட்ட பின்னர் தெரிவத்தாட்சி அலுவலர் சகல வாக்கெண்ணும் பிரதம அலுவலர்களை அழைத்து வாக்கெண்ணுவது பற்றியும் பெறுபேறுகளை எவ்வாறு ஒப்படைப்பது பற்றியும் சிறு விளக்கம் ஒன்றை கொடுப்பார்.

விளக்கக் கூடம் முடிவடைந்த பின்னர் தெரிவத்தாட்சி அலுவலர் ஒவ்வொரு பிரதம வாக்கெண்ணும் அலுவலரையும் தமக்குரிய வாக்கெண்ணும் நிலையத்திற்குச் சென்று வாக்கெண்ணும் பணியை ஆரம்பிக்கும் வண்ணம் கேட்டுக் கொள்வார். இவ்வாக்கெண்ணும் அலுவலர் தமக்குரிய வாக்கெண்ணும் நிலையத்திற்குச் சென்று பொறுப்பானவரிடம் பெட்டிகளை எதுவித குழறுபடி இல்லை என்பதை உறுதிசெய்து கொண்டு பெட்டிகளைப் பொறுப்பேற்றுக் கொள்வார். பின்னர் தன்னுடன் வாக்கெண்ண அமர்த்தப்பட்ட அலுவலர்களை மண்டபத்துக்குள் அழைத்துக் கொள்வார். இவர்களோடு அனுமதி அளிக்கப்பட்ட கட்சிகளின் அல்லது சுயேட்சைக் குழுக்களின் முகவர்களையும் மண்டபத்துள் அனுமதிப்பார். வேறு ஒருவரும் மண்டபத்தில் இருப்பதற்கு அனுமதியளிக்கப்படமாட்டார்கள். முகவர்கள் மண்டபத்தில் இருந்து வாக்கெண்ணும் பணிகளை மாத்திரம் கண்காணிக்க முடியுமே தவிர வேறு செயல்களில் ஈடுபட அனுமதிக்கப்படமாட்டார்.

சம்பந்தப்பட்ட சகல அலுவலர்களையும் அனுமதித்த பின்னர் பிரதம வாக்கெண்ணும் அலுவலர் வாக்கெண்ணும் பணியை ஆரம்பிப்பார். அவருக்கு வழங்கப்பட்ட வாக்குப் பெட்டிகளை எடுத்து முகவர் முன்னிலையில் ஒவ்வொரு பெட்டியும் சீல் உடையாது உள்ளன என்பதை உறுதிசெய்து கொண்ட பின்னர் வாக்கெண்ணுதலை ஆரம்பிப்பார். ஒவ்வொரு பெட்டியிலும் உள்ள வாக்குகளை எண்ணி எண்ணி 50 கொண்ட கட்டுக்களாகக் கட்டி பெட்டியில் உள்ள வாக்குகளும் சிரேஸ்ட தலைமை தாங்கும் அலுவலரால் கொடுக்கப்பட்ட பதிவேட்டின் தொகையும் சரியென ஏற்றுக்கொண்ட பின் கட்டாகக் கட்டப்பெற்ற வாக்குகளை பெரிய பெட்டியில் இடுவார். இவ்வாறு சகல பெட்டியில் உள்ள வாக்குகளும் பதிவேட்டில் உள்ள வாக்குகளும் சரியெனக் கொண்ட பின்னர் பெரிய பெட்டியில் உள்ள வாக்குக் கட்டுகள் ஒன்றாகக் கலக்கப்படும்.

பின்னர் பெரியபெட்டிகளில் உள்ள வாக்குக் கட்டுகள் ஒரு மேடையில் சுற்றி அமர்ந்திருக்கும் வாக்கெண்ணும் அலுவலரிடம் கட்டுக்கட்டாக கொடுக்கப்படும். இவர்கள் ஒவ்வொரு கட்டுக்களையும் எடுத்து ஒவ்வொரு கட்சிக்கும் சுயேட்சைக் குழுவுக்கும் இடம்பெற்ற வாக்குகளையும் யாருக்கு அளிக்கப்பட்ட வாக்கு என கண்டு பிடிக்க முடியாத, தெளிவற்ற வாக்குகளையும் அதற்குரிய பெட்டிகளில் இடுவார்கள். தெளிவற்ற வாக்குகளை சிரேஸ்ட வாக்கெண்ணும் அலுவலர் தாம் பெற்று முகவர் முன்னிலையில் அதனைப் பரிசீலித்து பார்ப்பார். இவற்றில் செல்லுபடியான வாக்குகளை அதற்குரிய கட்சிக்கோ அன்றி சுயேட்சைக் குழுவுக்கோ வழங்கி ஏனையவற்றை செல்லுபடியற்ற வாக்காகக் கணிப்பார்.

இவ்வாறு எண்ணப் பெற்ற வாக்குகள் கட்சி ரீதியாக அன்றி சுயேட்சைக் குழு ரீதியாக 50 வாக்குகள் கொண்ட கட்டாகக் கட்டப்படும்.

இவ்வாறு எண்ணிக் கட்டாக கட்டப்பெற்ற வாக்குகள் மீண்டும் ஒரு முறை அலுவலர்களிடையே மாற்றிக் கொடுக்கப்பட்டு உறுதி செய்யப் பெற்று ஒவ்வொரு கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் பெற்றுக் கொண்ட மொத்த வாக்குகள் செல்லுபடியற்ற வாக்குகள் தொகை பதிவேட்டில் பதியப்பட்டு தெரிவத்தாட்சி அலுவலருக்கு கொடுக்கப்படும். இதேபோல அஞ்சல் வாக்குகளும் சம்பந்தப்பட்டவர்களால் தெரிவத்தாட்சி அலுவலருக்கு வழங்கப்படும். ஒரு தேர்தல் தொகுதிக்கு உரிய வாக்குகளை கிடைக்கப் பெற்ற பின் யாழ்ப்பாண தெரிவத்தாட்சி அலுவலர் தொகுதிரீதியாக உடனுக்குடன் தேர்தல் ஆணையாளருக்கு அனுப்பி வைப்பார். தேர்தல் ஆணையாளர் இம் முடிவை உறுதிசெய்த பின்னர் தேர்தல் தொகுதி முடிவை உடனுக்குடன் வானொலி மூலமும் தொலைக்காட்சி மூலமும் நாட்டு மக்களுக்கு அறிவிப்பார். பின்னர் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட 11 தேர்தல் தொகுதிகளினதும் முடிவுகள் கிடைக்கப் பெற்றவுடன் 11 தொகுதிகளிலும் ஒவ்வொரு கட்சிகளும் பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை, செல்லுபடியற்ற வாக்குகளின் எண்ணிக்கை என்பவற்றை காட்டி மொத்தமாக வானொலி மூலமும் தொலைக்காட்சி மூலமும் மக்களுக்கு அறிவிப்பார். கட்சிகள் பெற்றுக் கொண்ட வாக்குகளின் அடிப்படையில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்திற்குரிய மொத்த 9 ஆசனங்களில் ஒவ்வொரு கட்சிக்கும் எத்தனை ஆசனங்கள் கிடைக்கப் பெற்றது என்றும் அறிவிப்பார்.

பின்னர் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட 11 தேர்தல் தொகுதிகளினதும் முடிவுகள் கிடைக்கப்பெற்றவுடன் 11 தொகுதிகளிலும் ஒவ்வொரு கட்சிகளும் பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை, செல்லுபடியற்ற வாக்குகளின் எண்ணிக்கை என்பவற்றை ஒன்று கூட்டி மொத்தமாக வானொலி மூலமும் தொலைக் காட்சி மூலமும் மக்களுக்கு அறிவிப்பார். கட்சிகள் பெற்றுக்கொண்ட வாக்குகளின் அடிப்படையில் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்திற்குரிய மொத்த 9 ஆசனங்களில் ஒவ்வொரு கட்சிக்கும் எத்தனை ஆசனங்கள் கிடைக்கப்பெற்றது என்றும் அறிவிப்பார்.

***கட்சிகள் பெறும் வாக்குகளும் அவற்றுக்குரிய உறுப்பினர் தொகை கணிக்கும் முறை :-***

ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் கட்சிகள் பெறும் வாக்குகளுக்கு எவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர்களை வழங்குவது என்ற விளக்கம் குறைவானதாகவே காணப்படுகின்றது. இதற்கு யாழ்ப்பாண மாவட்டத்தையே உதாரணமாகக் கொண்டு விளங்கப்படுத்தப்படுகின்றது.

செ.மகாலிங்கம் B.A(Hons)M.A
முன்னாள் திட்டப்பணிப்பாளர்,
திட்டமிடல் பணிப்பாளர்,
யாழ்.செயலகம்.

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம் 11 தேர்தல் தொகுதிகளைக் கொண்டது என்பதனை ஏற்கனவே கண்டோம். அதேபோல இத் தேர்தல் மாவட்டத்தின் சனத்தொகை பரப்பளவு என்பனவற்றின் அடிப்படையில் 9 பாராளுமன்ற உறுப்பினர் ஒதுக்கப்பட்டுள்ளனர் என்பதையும் கண்டோம். (தொடரும்)

# உயிருடன் இருக்கும் ஒருவருக்கு மரண வாக்காளர் அட்டை

## குருநாகலில் சம்பவம்

(கொழும்பு)

குருநாகல், பொல்காவெல தேர்தல் தொகுதியில் வாழும் வாக்காளர் ஒருவருக்கு 'வாக்காளர் மரணம்' என எழுதப்பட்டவாறு வாக்காளர் அட்டை கிடைக்கப்பெற்றுள்ளது.

இதனைக் கண்டு அதிர்ச்சியடைந்த குறித்தவாக்காளர், கோபத்துடன் இன்னமும் தான் உயிருடன் இருப்பதாகவும், மரணமடையவில்லை எனவும் தெரிவித்திருந்ததோடு இதுகுறித்து குருநாகல் மாவட்ட தேர்தல்கள் ஆணையாளரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

மேலும் தான் மரணமடைந்துள்ளது என்பது தொடர்பில் உறுதிப்படுத்துமாறு தேர்தல் அலுவலகம் எவ்வாறு தெரிவிக்க முடியும் எனவும் விளக்கம் கோரியிருந்தார்.

பொல்காவெல பிரதேசத்தைச் சேர்ந்த பி.எம்.வீரவிக்கிரம என்பவரே உயிருடன் இருக்கும் குறித்த வாக்காளர் ஆவார். (2-6)

# வாகன விபத்தில் மூன்று பேர் பலி

(கொழும்பு)

கொழும்பு கண்டி வீதியிலுள்ள நானு ஓயா ரயில்வே கடவையில் ரயில் மற்றும் வானும் ஒன்றுடனொன்று மோதியதில் 3 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். 9 பேர் காயமடைந்துள்ளனர்.

குறித்தவான் ரயில்வே கடவையை கடக்க முற்பட்ட வேளையில் இந்த விபத்து ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (2-6)

# ஐ.தே.கவுக்கு கிடைக்கும் வாக்குகளை ஜே.வி.பி. தடுக்கப் போவதில்லை

## லால்காந்த தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிக்க வேண்டாம் என்று நாம் ஒருபோதும் கூறப்போவதில்லை என மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் லால்காந்த தெரிவித்தார்.

இலங்கையின் தனியார் ஊடகமொன்றின் சிங்கள மொழியிலான விவாத மொன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையில் இதனைத் தெரிவித்தார்.

அநுராதபுர மாவட்டத்தில் ஜனநாயக தேசிய முன்னணி சார்பில் போட்டியிலும் இவர் எதிர்க் கட்சிகளுக்கு கூடுதலான ஆசனங்களை வழங்குமாறு தாம் மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (2-6)

# தேர்தல் வன்முறையை கட்டுப்படுத்த நுவரெலியாவிற்கு அதிரடிப்படை

(கொழும்பு)

நுவரெலியா மாவட்டத்தில் தேர்தல் வன்முறைகளைக் கட்டுப்படுத்த விசேட பொலிஸ் அதிரடிப்படையின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வேட்பாளர்களினதும் தேர்தல் அதிகாரிகளினதும் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நுவரெலியா மாவட்டச் செயலாளர் ஜீ.பீ.ஜீ. குமாரசிறி தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்டத்தில் கடந்த சில நாட்களாகத் தேர்தல் வன்முறைகள் அதிகரித்துள்ளதால் பாதுகாப்பு நடவடிக்கைகளை அதிகரிக்கத் தீர்மானித்துள்ளதாகவும் வேட்பாளர்கள், ஆதரவாளர்கள், தேர்தல் கடமைகளில் ஈடுபடும் அதிகாரிகள் ஆகியோரையும் அவர்களின் சொத்துக்களையும் பாதுகாக்கும் பொருட்டும் தேர்தல் கடமைகளைத் தங்கு தடையின்றி முன்னெடுப்பதற்காகவும் இந்தத் தீர்மானத்தை எடுத்ததாக அவர் குறிப்பிட்டார். (2-6)



# அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை மறுதினம் சனிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை சப்பறமும் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4மணிக்கு தேர் உற்சவமும் மறுநாள் திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளது. (ஓ-4)




யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற சேர். பொன். இராமநாதன் நினைவுப் பேருரை தொடரில் தந்தை தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தத்துவத்துறை பேராசிரியர் க.பாஸ்கரன், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், கலைத்துறை பீடாதிபதி என்.ஞானக்குமார் ஆகியோர் நினைவுப்பேருரை நிகழ்த்துவதையும், விருந்தினர்கள் மேடையில் அமர்ந்திருப்பதையும், நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- டுசாந்தன்)

# இடம்பெயர்ந்த வாக்காளர் வாக்களிக்க 8 மாவட்டங்களில் 88 வாக்களிப்பு நிலையங்கள்

(கொழும்பு)

இடம்பெயர்ந்த வாக்காளர்கள் வாக்களிப்பதற்காக 8 மாவட்டங்களில் 88 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. இடம்பெயர்ந்த மக்களில் 45 ஆயிரத்து 967 பேர் வாக்களிக்கத் தகுதிபெற்றுள்ளனர்.

புத்தளம் மாவட்டத்தில் 37 வாக்களிப்பு நிலையங்களும், வன்னி மாவட்டத்தில் 31 வாக்களிப்பு நிலையங்களும், அனுராதபுரம் மற்றும் கம்பஹா மாவட்டங்களில் தலா 6 வாக்களிப்பு நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன.

அத்துடன் யாழ்ப்பாணத்தில் 4 வாக்களிப்பு நிலையங்களும், களுத்துறை மாவட்டத்தில் 2 வாக்களிப்பு நிலையங்களும் தவிர கொழும்பு, மட்டக்களப்பு மாவட்டங்களில் தலா ஒரு வாக்களிப்பு நிலையமும் அமைக்கப்படவுள்ளது. (2-6)


ஒரு புதிய அரசியற் பண்பாடு நோக்கி.

பத்மினி சிதம்பரநாதன்

2010 ஏப்ரல் 08

பாராளுமன்றத் தேர்தலில்

தமிழர்களின் வாழ்வில் மீட்சி

தமிழ்ப் பெண்களின் வாழ்வில் பெரும் முன்னேற்றம்



பத்மினி சிதம்பரநாதன்

B.A(Hons),P.G.Dip.in.ed

இலங்கையில் சமாதானம் மலர இருதேசம் ஒருநாடு

உலக நாடுகளில் போருக்குப் பிந்திய சமூகங்களில் பண்பாடுகள் சீரழிந்துபோய்ச் சமூகங்கள் அழிவுக்குட்பட்ட வரலாறுகளை நாம் கண்டுள்ளோம். நமது தமிழ்ச் சமூகத்திற்கும் அந்தக்கதி ஏற்படாமல் பாதுகாக்கவும், தமிழ்ச்சமூகத்தை மீட்டெடுத்து விடுதலை காணவும் நாம் முயற்சி செய்யவேண்டும். அம்முயற்சியில்,

1. நீங்களும் நாங்களும் சேர்ந்து ஈடுபட உங்கள் ஒத்துழைப்பை நாடுகிறோம்.
2. இப்பணிக்கான அங்கீகாரத்தைப் பெற பத்மினி சிதம்பரநாதனுக்கு உங்கள் ஆதரவை நாடுகிறோம்.

தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ்

கருத்துப் பகிர்வுக்கு :- 021 222 3940

www.spathmini.com

(படங்களைப் பார்வையிடலாம்)

(சி-4898)


# பொன்சேகாவின் உடல் நிலை குறித்து ரணில் விக்கிரமசிங்க கவலை தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனநாயக தேசிய முன்னணியின் கொழும்பு மாவட்ட வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவின் உடல் நிலை தொடர்பில், எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கவலை வெளியிட்டுள்ளார்.

இராணுவத் தடுப்புக் காவலில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பொன்சேகாவிற்கு அவரது தனிப்பட்ட மருத்துவர்களின் சேவை யை வழங்குவதற்கு அரசாங்கம் ஆவன செய்ய வேண்டுமென ரணில் கோரியுள்ளார்.

இத தொடர்பாக சரத் பொன்சேகாவின் தனிப்பட்ட மருத்துவரும், சுகாதார சேவை பணிப்பாளரினால் பரிந்துரை செய்யப்படும் மற்றுமொரு மருத்துவரும்அவரைப் பரிசோதனை செய்ய அனுமதிக்கப்பட வேண்டுமென்றும் 2006 ஆம் ஆண்டுதற்கொலைக் குண்டுத்தாக்குதலின் பின்னர் ஜெனரல் சரத்பொன்சேகாவின் உடல் நிலை பாதிப்படைந்ததாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசிய வீரர் ஒருவரை அரசாங்கம் நடத்தும் விதம் மனிதாபிமானமற்றதென்றும் இதற்கமைய பொன்சேகாவின் தனிப்பட்ட மருத்துவர் சிகிச்சை அளிப்பதற்கு அனுமதிக்கப்பட வேண்டுமென அவர் மேலும் கோரியுள்ளார். (2-6)

# அரசியல் யாப்பு மாற்றப்பட்டாலும் அனைவருக்கும் சம உரிமை

## அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா தகவல்

(கொழும்பு)

அரசியல் யாப்பு மாற்றப்பட்டால் முஸ்லிம்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்பது தவறான கூற்றாகும். அரசியல் யாப்பில் எது மாறினாலும் அனைவருக்கும் தமது விருப்பப்படி மதத்தைப் பின்பற்றும் உரிமை உண்டு என்ற விதி மாற்றப்படமாட்டாது. அனைவருக்கும் சம உரிமை உண்டு என அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

ஆரம்பகாலம் தொட்டே இந்த நாட்டில் முஸ்லிம்கள் வாழ்ந்திருக்கின்றார்கள். அரசாங்களுக்கு விசுவாசமாக அவர்கள் நடந்திருக்கிறார்கள். அரசவை மருத்துவர்களாக அவர்கள் சேவை செய்கிறார்கள். எமது நாட்டின் சுதந்திரத்திற்காக பாடுபட்டுள்ளார்கள். அக்காலம் தொட்டு இன்றுவரை நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கிறார்கள்.

இந்த வகையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசும் சிறந்த அமைச்சுக்களை முஸ்லிம்களுக்கு வழங்கியுள்ளது. எனவே இம்முறை தேர்தலில் முஸ்லிம்கள் வெற்றியின் பங்காளர்களாக வேண்டுமே தவிர தோல்வியின் பங்காளர்களாக ஆகக்கூடாதென தெரிவித்தார்.

அமைச்சரின் ஈரியகொல்ல இல்லத்தில் திங்கள் நடைபெற்ற குருணாகல் மாவட்ட முஸ்லிம் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். இதில் அமைச்சர் தொடர்ந்து குறிப்பிடுகையில்,

அரசியல் யாப்பு மாற்றப்பட்டால் முஸ்லிம்களுக்கு பாதிப்பு ஏற்படும் என முஸ்லிம் காங்கிரஸ் தவறான பிரசாரத்தை முன்னெடுத்து வருகிறது. யாப்பில் எது மாறினாலும் அனைவருக்கும் தமது விருப்பப்படி மதத்தைப் பின்பற்றும் உரிமை உண்டு என்ற விதி மாற்றப்படமாட்டாது. அனைவருக்கும் சம உரிமை உண்டு என்றார். (2-6)

# தமிழ்மொழி தினப்போட்டி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்டமட்ட தமிழ் மொழித்தினப் போட்டியின் எழுத்தாக்கம் தவிர்ந்த ஏனைய போட்டிகள் யாவும் வெள்ளிக்கிழமை முற்பகல் 8.30 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் நடுவராக பணியாற்றுவதற்கு தமிழ், சங்கீதம், நடனம், நாடகம் ஆகிய துறைகளில் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களை அனுப்பிவைக்குமாறு பாடசாலை அதிபர்களை நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராசா கேட்டுக் கொண்டுள்ளார். (ஓ-30)

# பாராளுமன்றப் பொதுத் தேர்தல் - 2010

## அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் (தமிழ்-தேசியத்திற்கான மக்கள் முன்னணி)

### கொள்கையைக் காக்க புறப்பட்ட கூட்டம்...




1 Dr. கந்தசாமி திருலோகமூர்த்தி



2 கஜேந்திரகுமார் காங்கேசர் பொன்னம்பலம்



3 நடேசு துரைராஜா



4 நாகலிங்கம் குழந்தைவேலு



5 பத்மினி சிதம்பரநாதன்

**எச்சரிக்கை கொள்வோம் விழிப்படைவோம்**

கூட்டமைப்பு கொள்கையைக் கைவிடுகிறது.
தமிழ்மக்களின் நீண்டகால அபிலாசையை கூட்டமைப்பு கைவிடுகிறது.
நுணுகிப் பார்த்தல் மட்டுமே உண்மை புலப்படும்.
கூட்டமைப்புத் தலைமையின் சுயலாபம் கருதியே இந்த முடிவு.

கொள்கை இல்லாத அதாவது இலட்சியம் இல்லாத இனம் சீரழியும் ஆபத்து உள்ளது.
-ஆலயங்கள் அசுத்தமாகும். (உ-ம்: நல்லூரில் நடப்பது)
-வளங்கள் துஸ்பிரயோகம் செய்யப்படும். (உ-ம்: கீரிமலை, காங்கேசன்துறையில் நடப்பது)
-பண்பாடு சீரழியும்.
-மனிதர்களிடையே சந்தேகமும், போட்டியும், பொறாமையும், வன்முறையும், களவும், கொலையும் பெருகும்.

**சமூகம் சீரழிந்து காலம் கலியுகமாகும்.**

*இதைத் தடுத்து தமிழரின் விடிவை நோக்கிச் செல்ல*
***தமிழ்த் தேசியத்துக்கான மக்கள் முன்னணி உதயம்.***

**கொள்கைப்பற்று**
**மக்களில் நேசம்**
**வாக்கினில் நேர்மை**
**செயலில் அர்ப்பணிப்பு**

ஒரு புதிய மக்கள் அரசியலை தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி முன்னெடுக்கும்.
இது சண்டை வழியும் அல்ல. சாத்தியமற்றதும் அல்ல.
பண்பாட்டு எழுச்சியின் மூல நியாயத்தை நிலைநாட்டும் வழி.
சமூகத்தில் ஒளியை ஏற்றி இருளை அகற்றும் வழி.
அனைவரும் ஒன்றிணைவோம்.



6 பிரான்சிஸ் வின்சென்ற் டீ போல்



7 கலாநிதி கென்னடி விஜயரட்ணம்



8 விஸ்வலிங்கம் மணிவண்ணன்



9 சந்தனம் ஸ்ரீபன்



10 சின்னத்துரை வரதராஜன்




11 செல்லத்துரை சுப்பிரமணியம்



12 செல்வராசா கஜேந்திரன்

## அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்



(தீ-4897)



தந்தை செல்வாவின் 113 ஆவது பிறந்ததின நிகழ்வு நேற்றுக் காலை யாழ்.நகரிலுள்ள அவரது நினைவுச் சதுக்கத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் தந்தை செல்வா அறங்காவற் குழுத்தலைவர் பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன், பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், த.தே.கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா ஆகியோர் தந்தை செல்வாவின் சிலைக்கு மலர்மாலை அணிவிப்பதையும், மலரஞ்சலி நிகழ்வு இடம்பெறுவதையும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-டுசாந்தன்)

## நிறுவனத் தலைவர்களிற்கான மாவட்ட கண்காணிப்புக் குழுக்கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது


(யாழ்ப்பாணம்)

இன்று வியாழக்கிமை காலை 9.30 மணிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவிருந்த சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவிருந்த சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களிற்கும், அரச ச்சார்பற்ற நிறுவனங்களிற்குமான ஏப்ரல் மாதத்திற்குரிய மாதாந்த மாவட்ட கண்காணிப்புக் குழுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாகவும்,

இக்கூட்டம் எதிர் வரும் 5 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளதாகவும் சம்பந்தப்பட்டவர்களை தவறாது சமுகமளிக்குமாறும் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ஓ)

## சுயநிர்ணய உரிமையை அன்று வலியுறுத்தியவர் தந்தை செல்வா

### மாவை சேனாதிராசா



தமிழர்கள் பூர்வீக தாயக பிரதேசங்களான வடக்கு, கிழக்கு பகுதிகளை பாதுகாப்பதற்கு முன்னின்று செயற்பட்டவர் தந்தை செல்வா. இவ்வாறு தந்தை செல்வா அறங்காவற் குழுவின் உபதலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற தந்தை செல்வாவின் 113 ஆவது பிறந்ததின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தமிழர்களின் பூர்வீக தாயக பிரதேசங்களான வடக்கு,கிழக்கு பகுதிகளை பாதுகாப்பதற்கு முன்னின்று செயற்பட்டவர் தான் எமது தந்தை செல்வா.

அவர் விட்டுச் சென்ற தமிழர்களின் சுயநிர்ணய உரிமை, தன்னாட்சி ஆகிய அடிப்படைக் கோட்பாடுகள் பின்வந்த அரசியல் தலைவர்களால் இன்றும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

தந்தை செல்வாவினால் வகுக்கப்பட்ட சுயநிர்ணய உரிமையே தமிழர்களின் பிறப்புரிமையினை ஆதாரப்படுத்தப்படுகின்றது.

அன்று வடக்கு, கிழக்கில் அதாவது தமிழர் வாழும் பிரதேசங்களில் சிங்கள குடியேற்றங்கள் அமைக்கப்பட்டபோதும், தமிழர் உரிமைகள் மறுக்கப்பட்டபோதும் கூட சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தியவர்.

இலங்கை அரசாங்கம் நாட்டின் இறைமையைப் பாதுகாத்து தமிழர்களுக்கு நியாயமான தீர்வை வழங்காதுள்ளது. இதனால் தமிழர் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தையிலா? தந்தை சமஷ்டி தீர்விலா ? திம்பு பேச்சிலா? வட்டுக்கோட்டை தீர்மானத்திலா? எந்த அடிப்படையில் தீர்வு கிடைக்கும்?

எனவே இந்த நன்னாளில் தமிழ் மக்கள் தங்களைத் தாங்கள் ஆளக்கூடிய விதத்தில் தந்தை செல்வாவின் கோட்பாட்டை கடைப்பிடிக்க உறுதியுடன் உழைப்போம் என்றார். (ஓ-6-30)

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட மெய்வல்லுநர், பெரு விளையாட்டுக்களில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களுக்கான யாழ்.மாவட்ட பரிசளிப்பு விழா 5ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக வட மாகாண கல்வியமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்துகொள்ளவுள்ளார்.

மேற்படி பரிசு பெறவுள்ள மாணவர்களை 5 வலயங்களையும் சேர்ந்த பாடசாலை பொறுப்பாசிரியர்கள் தவறாது சமுகமளிக்கச் செய்யுமாறு யாழ்.மாவட்ட விளையாட்டுக் குழுத் தலைவர் அறிவித்துள்ளார். (ஓ)




## செயற்கை அவயவங்க்ள் பொருத்த வேண்டியவர்களுக்கு

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச செயலகர் பிரிவுக்குட்பட்ட செயற்கை அவயவம் பொருத்த வேண்டிய தேவையுடையவர்களை இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவில் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (ஓ-29)

## வெவ்வேறு விலைகளில் பெற்றோல் விற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண வர்த்தக நிலையங்களில் தற்போது பெற்றோல் வெவ்வேறு விலைகளில் விற்கப்படுகின்றன.

பெற்றோல் நிரப்பு நிலையங்களில் 120 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்படும் பெற்றோல் வியாபார நிலையங்களில் 120 ரூபா, 130 ரூபா,140 ரூபா என பலதரப்பட்ட விலைகளில் விற்கப்படுகின்றன.

இதனை விட சில கடைகளில் விற்கப்படும் பெற்றோல் தரம் குறைந்ததாகக் காணப்படுவதாகவும் பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர். (2)

## CHA நிறுவனம் நடத்திய மருத்துவ சிகிச்சை முகாம்

(வேலணை)

CHA அரச சார்பற்ற நிறுவனம் தீவகம், அல்லைப்பிட்டி பிரதேசத்தில் வாழும் மக்களின் நலன்கருதி நடமாடும் மருத்துவ சிகிச்சை முகாம் ஒன்றை கடந்த திங்கட்கிழமை நடத்தியுள்ளது.

இதில் இப் பிரதேசத்தில் வாழும் மக்களுக்கு CHA நிறுவனத்தினருடன் வருகை தந்த மருத்துவர்கள் நோயாளர்களை பரிசோதித்து மருந்துகளை வழங்கியதுடன் அப் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு சுகாதார பாவனைப் பொருட்களையும் இலவசமாக வழங்கியுள்ளனர்.

இதேவேளை இந் நிறுவனத்தினால் அனலைதீவுப் பகுதியில் இம் மருத்துவ முகாமை நடாத்தியுள்ளதாகத் தெரிவிக்கின்றனர். (ஓ-4-22)

## மாதாந்த உதவிப் பணமும் உதவிக் கொடுப்பனவுகளும்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்கு கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் இயங்கும் தபாலகங்கள், உப தபாலகங்கள் மூலமாக வழ்ங்கப்பட்டு வரும் பொதுசன மாதாந்த உதவிப்பணம், நோய் உதவிக் கொடுப்பனவுகள் என்பவை சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு இன்று வியாழக்கிழமை முதல் வழங்கப்படவுள்ளதாக கோப்பாய் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ஓ-4)

## 16 வயது இளைஞன் பாம்புக்கடிக்கு இலக்கானார்

கொக்குவிலைச் சேர்ந்த 16 வயது இளைஞனான ப.நிரோசன் பாம்புக்கடிக்கிலக்காகிய நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, மேற்படி இளைஞன் நேற்று முன்தினம் தனது வீட்டில் அலுமாரியின் மேலிருந்த பெட்டியைக் கீழே இறக்க முற்பட்ட வேளை பெட்டியினுள் இருந்த பாம்பு இவரைக் கடித்துள்ளது.

கடித்த பாம்பு உடன் ஓடி மறைந்துவிட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஓ)

## நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

லீலாவதி இராமநாதன் அம்மையாரின் நினைவுப் பேருரை எதிர்வரும் 5 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் "உயர்கல்வியில் பெண்கள் - ஒரு சமூக, பொருளாதார அணுகுமுறை" என்னும் தலைப்பில் கல்வித் துறைப் பேராசிரியர் எம்.சின்னத்தம்பி நினைவுப் பேருரையை வழங்கவுள்ளார். (ஓ-4)

## இலவச கற்றல் செயற்பாடு

(யாழ்ப்பாணம்)

துளிர்களின்" ஒளிமயமான எதிர்காலம்" இலவச கற்றல் செயற்பாடு ஆரம்ப நிகழ்வு இன்று பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (ஓ-4)

## மழை வேண்டி பதிகப் பாராயணம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினர் வெயிலின் கொடுமை தாங்க முடியாமல் உள்ளதைக் கருத்திற்கொண்டு யாழ். குடாநாட்டு ஆலயங்களில் மழை வேண்டிப் பிரார்த்தித்து மேகராக குறிஞ்சிப் பண்ணில் அமைந்த நீலாம்பரி ராகப் பதிகங்களைப் பாராயணம் செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

இப் பதிகங்களை மன்றத்தில் பெற்று ஆலயங்களில் மட்டுமல்லாது சைவ அடியார்களது இல்லங்களிலும் இப் பாராயணத்தை மேற்கொண்டால் வெப்பத்தின் கொடுமையிலிருந்து ஓரளவாவது விடை பெற்று வெப்பம்குறைந்து மழை பெய்யுமென மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி சைவ அடியார்கள், அன்பர்களிடம் வேண்டுகோள் விடுக்கின்றார். (ஓ)

## கல்விமாணி விரிவுரைகள்

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விமாணி மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்கான விரிவுரைகள் எதிர்வரும் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆரம்பமாகி நடைபெறும் எனத் தேசிய கல்வி நிறுவகத்தின் இணைப்பாளர் எஸ்.ஆர்.சத்தியேந்திரம் பிள்ளைஅறிவித்துள்ளார். (ஓ)

## ஆதன வரியினை விரைவில் செலுத்தவும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபை பிரிவுக்குட்பட்ட ஆதன வரியிறுப்பாளர்களில் இதுவரை 2009 ஆம் ஆண்டுக்கான ஆதனவரி செலுத்தாது இருப்பவர்கள் எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தும் படியும் வரி செலுத்தாது இருப்பவர்களுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்து தண்டப்பணம் அறவிடப்படவுள்ளதால் விரைந்து செயற்படுமாறு நல்லூர் பிரதேசசபை அறிவித்துள்ளது. (ஓ-30)

ஆசை கண்ணைக் குருடாக்குகிறது. காதைச் செவிடாக்குகிறது. ஆசையே துன்பத்திற்கு காரணம். -புத்தர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## யாழ்ப்பாணத்தில் திரைப்படத்துறை வளர்ந்திருந்தால் இத்தனை வேட்பாளர்கள் போட்டியிடமாட்டார்கள்

மனித மனம் எண்ணற்ற ஆசைகளைக் கொண்டது. அந்த ஆசைகள் பல வகைப்படும். ஆசைகளின் வகைமைகளை மனிதர்களின் செயற்பாடுகள் வெளிகாட்டிவிடும்.

ஆசை அறுமின்; ஆசை அறுமின்; ஈசனோடாயினும் ஆசை அறுமின் என்றார் திருமூலர்.

ஆசையை அறுத்துவிடுமாறு அவர் கூறியதற்குள் ஆழ்ந்த பொருள் உண்டு.

ஆசையின் உச்சம் மனிதர்களை பாவம் செய்ய வைக்கும்.

தனது ஆசையை நிறைவேற்றிக் கொள்வதற்கான வழிமுறைகள் அனைத்தும் பாவச்செயலாகவே அமையும்.

பண ஆசை பாவத்தை சம்பாதிக்கின்றது.

இதே போன்றுதான் பதவி ஆசையும். பதவிக்காக எதையும் செய்யும் மனநிலை தோன்றும். இதன் விளைவு துன்பமும் துயரமுமாக இருக்கும்.

இவை அளவுகடந்த ஆசையின் விளைவு.

இந்த ஆசைக்கு அப்பால் உளவியல் சார்ந்த ஆசைகளும் இருப்பதாக மனோதத்துவவியலாளர்கள் கூறுகின்றனர்.

நடை, உடை, பாவனை போன்றவை இந்த ஆசைக்குள் அடங்கும்.

கண்ணாடிக்கு முன்நின்று எங்களை நாங்களே நடிகர் விஜய்யாக, பிரசாந்தாக... இன்னும் யாராகவோ எண்ணிக்கொள்ளும் நடைமுறைகளும் இந்தவகை ஆசைக்குள் அடங்கக்கூடியவை.

இந்த ஆசை அடக்கப்படக்கூடியதல்ல. இதற்கு உரிய களம் அமைத்துக் கொடுக்க வேண்டும். விஜய் போல் தன்னைக் கற்பனை செய்பவனுக்கு நடிப்பு நன்றாக வரும்.

டெண்டுல்கர் என்று தன்னைக் கற்பனை செய்பவன் கிரிக்கெட்டில் தன்னை பூரணமாக அர்ப்பணிக்கும் இயல்பைக் கொண்டிருப்பான்.

இந்த வகையில், தற்போது நடைபெறும் பொதுத் தேர்தலில் யாழ். மாவட்டத்தின் வேட்பாளர்களின் பிரசார சுவரொட்டிகளைப் பார்க்கும்போது பல வேட்பாளர்கள் நடிகர்கள் போல தங்களை கற்பனை செய்கின்றனர் என்பது தெரியவருகின்றது.

அந்தக் கற்பனை ஆசையைத் தீர்க்கும் அருமருந்தாக நாடாளுமன்றத் தேர்தல் அமைந்துள்ளது.

தங்கள் புகைப்படங்கள் அடங்கிய சுவரொட்டிகளை சுவர்முழுவதும் ஒட்டி இரசிக்கும் இயல்பு அவரவர் ஆசையைத் தீர்க்குமே அன்றி பிறருக்கு பயன்தரா.

எதுவாயினும் எங்கள் யாழ்ப்பாணத்தில் திரைப்படத்துறை வளர்ச்சி கண்டிருக்குமாயின், வேட்பாளர்களில் பலர் தலைசிறந்த நடிகர்களாக விளங்கியிருப்பார்கள்.

என்ன செய்வது! எங்களிடம் திரைப்படத்துறை மந்தப்பட்டுள்ளதால், முகங்களை வெளிக்காட்டக்கூடிய களம் இல்லாம் போக, தேர்தல் அவர்களின் ஆசையைத் தீர்க்கும் பாசறையாயிற்று.

அவர்கள் நடிக்கட்டும், கதைவசனம் பேசட்டும், அவர்களின் படங்கள் எதிர்வரும் 8ந் திகதி திரைக்குவர பார்வையாளப் பெருமக்கள் யாரின் நடிப்பு அபாரமோ அதை நிராகரிப்பர்.

அட! திரைப்படத்தில் நல்ல நடிப்பிற்கு ஆதரவு. தேர்தலில் நல்ல நடிப்பிற்கு நிராகரிப்பு. இதுதான் இரண்டிற்கும் வித்தியாசம்.

எங்க புரியப்போகிறது. ஆசை உள்ளிருந்து அறுக்கிறதே.

# வைராக்கியம், குரோதம், அரசியல் பழிவாங்கலூடாக நாட்டினை ஒருபோதும் கட்டியெழுப்ப முடியாது

## சர்வமத கூட்டமைப்பு

(கொழும்பு)

நாட்டின் சமாதானத்தையும் சகோதரத்துவத்தையும் கட்டியெழுப்புவதற்கு மதத் தலைவர்களால் எடுக்கப்படுகின்ற முயற்சிகள் அரசியல் கட்சி களால் வீணடிக்கப்படுகின்றன.

வைராக்கியம் குரோதம் மற்றும் அரசியல் பழிவாங்கலினூடாக இந்நாட்டை ஒரு போதும் கட்டியெழுப்ப முடியாது என்று தேர்தல் வன்முறைகளைத் தவிர்ப்பதற்கான சர்வமதக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

மதத் தலைவர்கள் மக்களை வழி நடத்துபவர்களாகவே இருக்க வேண்டும். தவிர பொருத்தமற்ற பதவிகளுக்காக மக்களை ஏமாற்றக்கூடாது. தேர்தலில் குதிப்பதும் விருப்பு வாக்குகளைக் கேட்டு நிற்பதும் தர்மத்துக்கு உரித்தானதல்ல. அது மட்டுமல்லாது இவ்வாறான தலைமைகளும் அரசியல் வாதிகளும் இணைந்து கொண்டு மதங்களுக்கிடையில் பிளவுகளை ஏற்படுத்துவதற்கு முயற்சிக்கின்றனர் என்றும் அந்த அமைப்பு விசனம் தெரிவித்துள்ளது.

மேற்படி அமைப்பு ஏற்பாடு செய்திருந்த செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் கொழும்பு நிப்பொன் ஹோட்டலில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே இலங்கைத் திருச்சபையின் குருநாகல் ஆயர் அதிவண. குமார இலங்க சிங்க மற்றும் கொலன்னாவை சிறி செனவி ரத்னா ராமய விஹாராதிபதி வெலிகம தம்மிசார தேரர் ஆகியோர் இவ்வாறு தெரிவித்தனர்.

இந்த செய்தியாளர் மாநாட்டில் தெகிவளை விஷ்ணு கோவில் இலக்சுமி காந்தன் ஐயர் ஜெகதீஸ்வரக் குருக்கள் மாத்தறையைச் சேர்ந்த களுபான பியரத்தன தேரர், அருட் சகோதரி மெக்டலின் பிரான்ஸ்சிஸ் மற்றும் வண பிதா ஜெயந்த பலகல்ல ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

இங்கு கருத்துத் தெரிவித்த ஆயர் அதிவண குமார இலங்கசிங்க கூறுகையில், மதங்கள் என்பவை உயிருள்ளவை எனவே மக்களை வாழ வைக்கும் செயற்றிட்டங்களையே மதங்கள் கொண்டிருக்கின்றன. சர்வ மத கூட்டமைப்பு என்பது புதிய விடயமல்ல. எனினும் நாட்டின் நலன் கருதிய மக்களின் தேவை உணர்ந்த எமது ஆலோசனைகள் எந்தளவுக்கு உள்வாங்கப்படுகின்றன என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

தேர்தலில் வாக்களிப்பது என்பது வாக்காளர் ஒருவரின் அடிப்படை உரிமை ஆகும் . அதனைப் பலவந்தமாக பறித்தெடுப்பதற்கான உரிமை எவருக்கும் கிடையாது. ஆனால் இங்கு நடப்பது இது தான். தேர்தல் வந்துவிட்டால் வன்முறைகளுக்கு பஞ்சமில்லை தாக்குதல்கள் அச்சுறுத்தல்கள் மற்றும் மனிதப் படுகொலைகள் என மிதமிஞ்சிய சட்ட மீறல்கள் இடம்பெறுகின்றன. எமது மக்களிடத்தில் நம்பிக்கை இழக்கப்பட்டு உள்ளது. அதனை கட்டிஎழுப்புவதற்கான அடித்தளம் இல்லை.

இதனால் இன்று தேர்தல்களையும் வாக்களிப்பதையும் விரும்பாதவர்களாக மக்கள் மாறி வருகின்றனர். இது ஒரு புறம் இருக்க மக்களுக்கிடையிலும் மதங்களுக்கிடையும் பிளவுகளை ஏற்படுத்தி அதன் மூலம் இலாபம் தேடுவதற்கும் ஒரு சிலர் முயற்சிக்கின்றனர். நீதியுமானதும் சுதந்திரமானதுமான தேர்தல் ஒன்று நடைபெற வேண்டும் என்பதே சகலரதும் எதிர்பார்ப்பாக இருக்கின்றது. இந்த நிலைமைகளில் இருந்து பாதுகாப்பதற்குத் தான் நாம் சகல தரப்பினரிடமும் கோரிக்கை விடுக்கின்றோம் என்றார். (2-6)

## பரிசுத்த வார வழிபாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.தூய மரியன்னை ஆலயத்தில் புனித வியாழன் தினமான இன்று மாலை 5 மணிக்கு திருப்பலியும் இரவு 10 மணிக்கு இரவு ஆராதனையும் இடம்பெறும்.

மேலும் பெரியவெள்ளி தினமான நாளை வெள்ளிக் கிழமை காலை 6.30 மணிக்கு சிலுவைப்பாதையும் மாலை 4 மணிக்கு மாலை வழிபாடும் புனித சனி தினமான நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு ஏழு வார்த்தைகள் தியானமும் இரவு 10.30 மணிக்கு திருவிழிப்பு வழிபாடும், உயிர்த்த ஞாயிறு தினமான 4ஆம்திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 5.15 மணிக்கு ஆயர் தலைமையில் முதல் திருப்பலியும் காலை 7.15 மணிக்கு இரண்டாம் திருப்பலியும் இடம்பெறவுள்ளது. (ஓ)

## தற்காலிக இணைப்பிலுள்ள முல்லை,வவு.வடக்கு ஆசிரியர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்காலிக இணைப்பில் கடமையாற்றும் முல்லைத்தீவு, வவுனியா வடக்கு வலய ஆசிரியர்கள் தங்களது ஏப்ரல் 2010 இற்குரிய சம்பளப் பட்டியலில் கையொப்பமிடுவதற்கு நாளை வெள்ளிக் கிழமையும், நாளை மறுநாள் சனிக்கிழமையும் யாழ்ப்பாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு சமுகமளிக்குமாறு முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் மா.தேவேந்திரன் கேட்டுக்கொள்கின்றார். (ஓ)

## வடக்கு மக்களின் நீர்த் தட்டுப்பாட்டை நீக்க தெற்கிலிருந்து நதி திசை திருப்பும் திட்டம்

### ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

வடபகுதி மக்கள் முகம் கொடுத்துள்ள தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் வகையில் தெற்கிலிருந்து யாழ்ப்பாணம் வரையும் நதி திசை திருப்பும் திட்டம் முன்னெடுக்கப்படுமென்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அதேநேரம் அடுத்த வருடம் முதல் பாடசாலை பாடத் திட்டத்தில் இலங்கையின் வரலாறு உள்ளடக்கப்பட்டு பாடசாலைகள் தோறும் போதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறினார்.

எமக்கு 2500 வருட கால கௌரவமான வரலாறு உள்ளது. கடந்த மூன்று தசாப்தங்களாக துண்டாடப்பட்டிருந்த நாட்டை மீண்டும் ஒன்றுபடுத்தியுள்ளோம். இவ்வாறு சிறப்பு மிக்க வரலாற்றை இந்நாடு கொண்டிருக்கின்றது. இருந்தும் அதனைப் பாடசாலைகளில் போதிப்பது ஏற்கனவே சிறிது காலம் தடை செய்யப்பட்டிருந்தது. இருப்பினும் அடுத்த வருடம் முதல் இலங்கை வரலாறு பாடசாலைப் பாடத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு போதிக்கப்படும். நில்வள கங்கை ஹம்பாந்தோட்டைக்குத் திசை திருப்பப்பட்டு அங்கு வாழும் விவசாயிகளின் தண்ணீர் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும். அதே நேரம் வட பகுதியிலுள்ள நீர் நிலைகளைப் பயன்படுத்தி யாழ்ப்பாணம் வரையும் புதிதாக கங்கையொன்று அமைக்கப்படும். (ஓ-6)

# பாலவிகாஸ் கல்வி-பாபா

மனிதன் என்றைக்கு நீதிமானாகவும் தர்மவானாகவும் விளங்குகின்றானோ அன்றிலிருந்து அவனிடம் இறைவன் குடி கொள்கின்றான். இறைவன் குடிகொள்ளும் போது அவன் மனம் சாந்தி பெறுகின்றது. சாந்தி பெற்ற உள்ளம் அன்பை வெளிப்படுத்துகின்றது. அன்பே தெய்வமாகின்றது.

இன்றைய மனித சமூகத்தில் இதனைக் காண முடியவில்லை. இதன் காரணமாகவே பழக்கப்பட்ட மிருகத்தைப் பாவித்து பழக்கப்படாத அதே இன மிருகத்தை வளைத்தும் பிடிக்க முயல்வது போன்றே ஸ்ரீ சத்யசாயி பாபாவும் மனித வடிவம் பூண்டு மனிதனாக நடமாடுகின்றார். இருந்தும் காலம் தவறிய தின்பண்டங்கள் போல் மனிதர்கள் காட்சியளிப்பதைப் பார்த்த பாபா பாலகர்களுக்கான பாலவிகாஸ் என்னும் கல்வி முறையை 1968 ஆம் ஆண்டு அறிமுகம் செய்து வைத்தார்.

மனிதனின் இயல்பு ஆனந்தமாய் இருப்பதே. நற்பண்புகள் நிறைந்திருக்கும் போது தான் ஒருவன் ஆனந்தமாய் இருப்பான். தீய பண்புகள், தீய குணங்கள் நிறைந்திருக்கும் ஒருவனிடம் ஆனந்தத்தை எதிர்பார்க்க முடியாது. அவன் மனம் அமைதியின்றிக் காணப்படும். எனவே ஒருவனிடத்தில் நற்பண்புகளை வளர்ப்பதற்காக உருவாக்கப்பட்ட கல்வியே பால விகாஸ் கல்வி.

பாலவிகாஸ் என்றால் என்ன? இக்கல்வி யாருக்கு அவசியம்? ஏன் அவசியம் என எடுத்துக் கொண்டால் பால என்றால் சிறுவர் விகாஸ் என்றால் மலர்ச்சி. சிறுவர் மலர்ச்சியே பால விகாஸ் எனப் பொருள்படும். நற்பண்புகளை உருவாக்க ஒவ்வொருவரிடத்தும் தெய்வ பக்தி, பாவ பீதி, சமூக நீதியை விளங்கச் செய்தல் வேண்டும். தெய்வ பக்தி ஒருவனிடத்து நிறைந்து காணப்படும் போது அவன் பாவத்துக்கு அஞ்சு



வான். சமூக நீதி ஒழுங்கிற்கு ஏற்ப வாழ்வான். இது போன்றே பாவம் செய்ய அஞ்சுப்வனிடத்து தெய்வ பக்தி, சமூகநீதி காணப்படும். தெய்வ பக்தி, பாவ பீதி, சமூக நீதி இவை மூன்றும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந் தவையே. இம் மூன்றும் விளங்கும் ஒருவன் சத்தியம், தர்மம், சாந்தி, அன்பு, அகிம்சை என்னும் கோட்பாடுகளை உடையவ னாகக் காணப்படுவான். இந்த உயரிய பண்புகளை வெளிக் கொணர்வதே பாலவிகாஸ் கல்வி.

ஜெய்சாயிராம் யாதவன்

# பொதுநோக்கங்களின் அடிப்படையில் ஜே.வி.பி.யுடன் இணைந்து செயற்படமுடியும்

## திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு

புதிய பாராளுமன்றத்தில் தேசிய நல்லிணக்க அரசாங்கம் அமைக்கும் மக்கள் விடுதலை முன்னணியின் யோசனையை நாங்கள் மிகவும் சாதகமாகவே ஆராய்கின்றோம். அதே நிலைப்பாட்டில் தான் நாங்களும் இருக்கின்றோம் என்று ஐக்கிய தேசிய முன்னணியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் செவ்வாய்க் கிழமை நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துவெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் கூறியதாவது,

புதிய பாராளுமன்றத்தில் தேசிய நல்லிணக்க அரசாங்கம் ஒன்றை அமைக்கும் மக்கள் விடுதலை முன்னணியின் யோசனையை வரவேற்கிறோம். அதனை சாதகமான முறையில் அணுகுகின்றோம். எம்மால் பாராளுமன்றத்தில் பொது நோக்கங்களின் அடிப்படையில் இணைந்து செயற்பட முடியும் என்று நம்புகின்றோம்.

இவ்வாறு தேசிய நல்லிணக்க அரசாங்கம் ஒன்றை அனைத்துக்கட்சிகளினதும் ஒத்துழைப்புடன் மேற்கொள்ள முடியுமானால் அது சிறப்பானதாக அமையும். இன்று நாட்டில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்த வேண்டியுள்ளது. ஊடக சுதந்திர நிலைநாட்டப்பட வேண்டும். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை நீக்கப்படவேண்டும். எனவே இந்த பொதுவான விடயங்களில் ஒன்றாக இணைந்து செயற்பட முடியும்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது எமது எதிர்கால வேலைத்திட்டங்களை நாங்கள் தெளிவாக கூறினோம். அதாவது பொதுத்தேர்தலில் அவரவர் தனித்துப்போட்டியிடுவதாகவே அன்று இணக்கப்பாட்டுக்கு வந்தோம். எனினும் தேர்தலின் பின்னர் இணைந்து செயற்பட முடியும். அதில் சிக்கல்கள் ஏற்படும் என்று நாங்கள் கருத வில்லை என்றார். (2-6)

# எக்னெலிகொட இறுதியாக தொலைபேசியில் உரையாடிய நபர் தொடர்பில் சந்தேகம்

## பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

காணாமல் போயுள்ள ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட தன்னுடன் இறுதி யாக தொலைபேசி மூலம் உரையாடிய நபருடனேயே சென்றிருக்கலாம் என்று சந்தேகிப்பதாக பொலிஸ் குற்றவியல் பிரிவுக்குப் பொறுப்பான பிரதி பொலிஸ் மா அதிபர் அனுர சேனா நாயக்கா தெரிவித்தார்.

தம்புள்ள பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவரிடமிருந்தே இந்த தொலைபேசி அழைப்பு கிடைக்கப்பெற்றுள்ளதாக பொலிஸ் விசார ணைகளின் மூலம் தெரியவந்துள்ளதாகவும், அந்த அழைப்பு திடீரென துண்டிக்கப்பட்ட நிலையிலேயே ஊடகவியலாளர் காணாமல் போயுள்ளார் என்றும் கூறினார்.

பொலிஸ் தலைமையக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற விஷேட செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு தகவல் தருகையிலேயே பிரதி பொலிஸ் மா அதிபர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது,

ஊடகவியலாளர் எக்னெலிகொட காணாமல் போன தினத்தன்று அவருடைய கையடக்கத் தொலைபேசிக்கு இறுதியாக இரு தொலைபேசி அழைப்புக்கள் வந்துள்ளன. இவற்றில் இரண்டாவது அழைப்பானது தம்புள்ள பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவரிடமிருந்தே கிடைக்கப் பெற்றுள்ளதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இவ்வாறு அவருக்கு கிடைக்கப்பெற்ற இறுதி அழைப்புடன் உரையாடிக் கொண்டிருந்த நிலையிலேயே அந்த அழைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அவருடைய தொலை பேசியும் செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே அவருக்கு கிடைக்கப்பெற்ற அந்த இறுதி தொலைபேசி அழைப்பு தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இருப்பினும் இது வரையில் ஊடகவியலாளர் எக்னெலி கொட தொடர்பில் எவ்வித தகவலும் கிடைக்கப்பெறாமை வருந்தத்தக்க விடயமே. சம்பவம் தொடர்பான விசாரணைகள் தீவிரமாக்கப்பட்டுள்ளதால் வெகு விரைவில் அவர் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல்கள் கிடைக்கப்பெறும். (6)

---

## யா/ ஆனைக்கோட்டை அ.மி.த.க.பாடசாலை

### அதிபர் உயர் திரு சி.நாகையா (அதிபர் தரம் I) அவர்களின்

# சேவை நயப்பும் மணிவிழாவும்

**இடம்:- யா/ஆனைக்கோட்டை அ.மி.த.க.பாடசாலை**
**காலம்:- 2010.04.01**

### வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



உயர்திரு. சி.நாகையா அதிபர் அவர்களின் மணிவிழா நிகழ்வினை முன்னிட்டு ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலைச் சமூகம் வெளியிடும் சேவை நயப்பு மலரூடாக அவருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகையடைகிறேன்.

அதிபர் சேவை 1 ஐச் சேர்ந்த நாகையா அவர்கள் தனக்குக்கிடைத்த பாடசாலையில் நிறைவான சேவையாற்றியுள்ளார். ஏழை மாணவர்களை தனது வீட்டுக்கு அழைத்து இரவிலும் கல்வி கற்பித்துப் பலர் உயர்கல்வி பெற வழி வகுத்தவர்.

சமூகத்தில் நன்மதிப்பினைப் பெற்றுள்ள இவர் சமய சமூக நிறுவனங்களில் நிறைவான பணியாற்றுவது யாவரும் அறிந்ததே.

கல்வித்துறைக்கு இவர் நீண்டகாலம் ஆற்றிய சேவைக்கு இவரைப் பாராட்டுவதுடன் ஓய்வுக் காலத்தில் குடும்பத்தினருடன் சந்தோஷமாக நோய் நொடியின்றி நீண்ட காலம் வாழ்ந்து சமூகப் பணி யாற்ற இறையருள் கிடைப்பதாகுக.

**ப.விக்னேஸ்வரன்**
**வலயக்கல்விப் பணிப்பாளர்,வலிகாம வலயம்.**



| |
|---|
| பிறந்த திகதி:-31.03.1950 |
| கல்வி கற்ற பாடசாலை-யா/சாவகச்சேரி றிபோக் |
| விசேட பயிற்சி :-சமூகக்கல்வி |
| முதல் நியமனம் - *01.01.1977-14.07.1980* |
| தோட்டப்பாடசாலை |
| *15.07.1980-22.02.1981* |
| யூறிகுறாப் ஆக்கரத்தன்ன அர.தோ. பாடசாலை |
| 23.02.1981-31.06.1982 |
| ஆசிரியர் கலாசாலை, கோப்பாய் |
| *01.07.1982-06.30.1986* |
| மன்/புனித லூசியா றோ.க.த.க. பாடசாலை |
| *01.05.1986 -06.07.1993* |
| யா/நவாலி மகாவித்தியாலயம் உப அதிபர் |
| *07.07.1993-31.03.2010* |
| யா/ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலை |

### பணி நயப்புச் செய்தி



கருவறை தொடக்கம் ஆயுட்காலம் வரை தொடருகின்ற கற்றற் செயற்பாடுகள் விரிவடைந்து பண்முகப்பரிமாணங்கள் பெற்று வருகின்ற இன்றைய கால கட்டத்தில் பல்வேறு குடும்ப சமூகப் பின் புலத்தினைச் சார்ந்த மாணவர்கள். முதன் முதலில் சங்கமமாகின்ற ஒழுங்கு முறைமைப் படுத்தப்பட்ட கல்விக் கூடமாக ஆரம்பக் கல்விப் பிரிவுப் பாடசாலைகள் விளங்குகின்றன. சின்னஞ்சிறார்களின் எதிர்கால பூரண நிறைவுடைய ஆளுமை வளர்ச்சிக்கு அத்தியாவசிய தேர்ச்சிக்குரிய அடிக்கட்டுமான பெறுமானங்களை ஊட்டுகின்ற இப்படிப்பட்ட கல்விக் கூடங்களில் ஒன்றாகிய யா/ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலை அதிபராகிய திரு.சி.நாகையா அவர்கள் அகவை அறுபதில் பணி நிறைவெய்தி ஓய்வு பெற்றுச் செல்லுகின்றார். இவர் தனது சேவைக்காலத்தில் சமூக் அங்கத்தவர்களின் ஒத்துழைப்பைப் பெற்று அவர்களது அபிலாசைகளை நிறை வெய் தச் செய்வதில் கண்ணும் கருத்துமாகச் செயற்பட்டார். அன்பு, கருணை, பரிவு, இரக்கம், தீவிர, கடமையுணர்வுடன் ரம்மியமான பாடசாலைச் சூழலில் மாணவர்கள் கற்கும் வாய்ப்புகளை ஏற்படுத்தினார். பாடசாலை நேரத்திற்கு அப்பால் தனது வீட்டிற்கு மாணவர்களை வரவழைத்து இரவு பகல் என்று பாராமல் எழுத்தறிவு ஊட்டுவதில் தனது முழுநேரத்தையும் செலவு செய்த செம்மல் ஆவார்.

கல்வி அடைவுப் பெறுபேறுகளும் இணைப்பாடவிதானச் செயற்பாட்டுப் பெறுபேறுகளும் பாடசாலைகளில் இடம்பெறுகின்ற பல்வேறு நிகழ்வுகளில் மாணவர்களின் ஆற்றுகைச் செயற்பாடுகளும் இவரது முகாமைத்துவ சேவைத்திறன் களைப் பறைசாற்று வனவாக இருந்தன. நேரக் கட்டுப்பாடு, ஒழுங்குக் கட்டுப்பாடு சிறந்த சமூக ஊடாட்டம் என்பவற்றிற்கு முன்னுதாரணமாகச் செயற்பட்ட கல்வியாளன் திரு.சி.நாகையா அவர்கள் ஓய்வு பெற்றுச் சென்றாலும் அவரது கல்விப்பணி தொடரவும் எதிர்கால வாழ்வு சிறப்பாக அமையவும் இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

**சு.சுந்தரசிவம்**
**பிரதிக்கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்),**
**வலயக்கல்வி அலுவலகம், வலிகாமம்.**

### நல்நெறியாளன் நாகையா



ஆனைக்கோட்டை அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையின் அதிபர் சின்னத்தம்பி நாகையாவைப் பாராட்டக் கிடைத்த வாய்ப்பு மிகப் பெரிது என எண்ணுகின்றேன். 1982இல் நான் ஆசிரியராகப் மன்னாரில் பணிபுரிந்தபோது அவர் மன்னாரில் கடமை உணர்வு மிக்க சமூகவியல் ஆசிரியராகக் கணிக்கப்பட்டதை அறிந்து மிகவும் பெருமிதம் அடைந்தேன். அதே பெருமிதம் குன்றா வகையில் 1ஆம் தரப் பாடசாலையான நவாலி மகாவித்தியாலயத்தில் உப அதிபராக இருந்து நிர்வாகக் கடமைகளையும் தனது வகுப்பறை செயற்பாடுகளையும் சரி சமமாக ஆற்றியதும் முதலாம் தரப் பாடசாலையில் அதிபராகும் சந்தர்ப்பம் கிடைத்தும் தான்நீண்ட காலம் கடமை ஆற்றிய 3ஆம் தரப் பாடசாலையில் அப்பகுதி மாணவரது நலன் கருதியும் பெற் றோரின் விண்ண்ப்பத்தை மறுத்துரைக்க விரும்பாமலும் தொடர்ந்து கடமையாற்றி ஓய்வு பெறுகின்றார்.

பயமுறுத்தலுக்கும் பழிக்கும் பணியாத நெஞ்சுரம், அதிகாரிகளுக்கும் அன்புள்ளங்களுக்கும் பணியும் பண்புள்ளம், இறை உணர்வும் கடமையுணர்வும் சமநிலையில் நிற்கத், தடம் புரளாமல் சென்ற நிர்வாகம் இவை அனைத்தும் ஒன்றாக நின்றமை நாகையா என்ற நல்லோனின் நாணயத்தில் நாணயமாக நடப்பது நாகையாவின் பிறப்புரிமை. அதனால் பல பொறுப்புக்களைப் பரிசுத்தமாகக் கையேற்றுப் புகழ் பெற்றார். சமூகவியலில் வல்லவ னாக அறிமுகமான திரு.சி.நாகையா அவர் கள் சிறந்த நிர்வாகியாக ஏழைகளின் பரிவுள்ளம் கொண்டவராக எல்லாவற்றுக்கும் மேலாக மிக மிக நல்லவராக அடை யாளம் காணப்பட்டு ஓய்வு பெறுவது பாராட்டுக்குரியது.

எனது பணிக்காலத்தில் மிகச் சிறிய பாடசாலை யாகக் காணப்பட்ட அவரது பாடாசாலை பல வளம் கொண்ட தாக மாற்றமடைந்தமை அவரது நிர்வாகத்திறமையினாலாகும். எனது பணிக் காலத்தில் அவர் எனக்குத் தந்த ஒத்துழைப்புக்கு நன்றி கூறுவதுடன் ஓய்வுக் காலத்திலும் மாணவர் நலன்பேண இறைவன் அவருக்கு நல்லாரோக்கியத்தையும் நீண்ட ஆயுளை யும் நல்க வாழ்த்துகின்றோம்.

**திருமதி. R.இருதயநாதன்**
**ஓய்வு நிலைக் கல்விப் பணிப்பாளர்,**
**வலிகாமம்.**

### அர்ப்பணிப்புள்ள அதிபர்



திரு.சின்னத்தம்பி நாகையா அவர்கள் முப்பத்தி மூன்று வருடங்கள் கல்விச் சேவை புரிந்து ஓய்வு பெற இருக்கும் அவர்களது தன்னலமற்ற சேவையினைப் பாராட்டுவதில் பெருமை அடைகின்றேன். கல்விப் புலத்தில் ஆசிரியராக, உப அதிபராக, அதிபராகப் பணி புரிந்துள்ளார். 1993 ஆம் ஆண்டிலிருந்து யா/ஆனைக்கோட்டை அ.மி.த.க. பாடசாலையின் அதிபராக இருந்து அரும்பணியாற்றியுள்ளார். அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் பாடசாலையின் வளர்ச்சிக்கு அரும் பாடுபட்டவர். தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் பயிலும் மாணவர்களை சித்தி எய்தவைப்பதில் அவரது பங்கு மிக முக்கியமாக இருந்தது. மாலை நேரத்தில் மாணவர்களைத் தனது வீட்டிற்கு வரவழைத்து கல்வி கற்பித்துப் பின்னர் தனது வீட்டிலேயே இரவு தங்க வைத்து பின்னர் காலையிலும் கற்பித்து வீட்டிற்கு அனுப்பும் அவரது அர்ப்பணிப்புள்ள சேவையினை அவரிடம் கல்வி கற்ற மாணவர்கள் என்றும் மறக்க மாட்டார்கள். கல்விப் பணி மட்டுமன்றி சமூகப்பணியிலும் ஈடுபட்ட அதிபராக விளங்குகின்றார். அவரது ஓய்வுக்காலம் சிறப்புற வாழ்த்துகின்றேன்.

**சி.கந்தசாமி**
**கோட்டக்கல்விப் பணிப்பாளர், சண்டிலிப்பாய்.**

### மனம் தளராது பணியாற்றுபவர்

சேவையால் உயர்ந்து சீரிய சிறப்பினைப் பெற்று மக்கள் மனதில் அழியா இடம் பெற்றுள்ள எங்கள் பாடசாலை அதிபர் திரு. சி.நாகையா எமது பாடசாலையில் அதிபராக பதினெட்டு வருடங்களாக பணியாற்றிய காலத்தில் கல்வித்துறையைமுன்னேற்றியது மட்டுமல்ல, பௌதீக வளங்களைப் பெருக்கி, மாணவர்களின் கல்வி, விளையாட்டு ஏனைய துறைகளிலும் முத்திரை பதிக்க வைத்து மணிவிழாக் காணும் நாயகனை மனமாரப் பாராட்டுவதில் மிகமிக மகிழ்கின்றோம். மூன்று தசாப்த காலமாகக் கல்விப்பணியே தலையாய பணியெனக் கொண்டு செயற்பட்ட வீரராவார். அதிபர் அவர்களின் பணி பல்லாண்டு சிறந்தோங்கி விளங்கவும் வளமுடன் வாழ்வு சிறப்பாக அமையுவும் எல்லாம் வல்ல இறைவனை இவ் வேளையில் வேண்டி நிற்கின்றோம்.

**பாடசாலை அபிவிருத்திச் சபை உறுப்பினர்கள்,**
**மாணவர்கள், பெற்றோர், நலன் விரும்பிகள்.**

### அயராது உழைத்த எமது அதிபர்

அயராது உழைத்த எமது அதிபர் அகவை அறுபதில் இளமையான தோற்றத்துடனும் பணிவான பண்புடனும் உண்மையுடனும் அன்பின் இலக்கணமாயும் பொறுமையின் சிகரமாகவும் வாழ்ந்து காட்டிய எமது அதிபர் திரு . சி. நாகையா அவர் பாடசாலை அதிபர் பதவியை விருப்புடன் ஏற்றுப் பல சாதனைகளையும் புரிந்து பாடசாலையின் உச்ச நிலை அடைந்தும் வன்முறையை சிறிதும் விரும்பாத , சமூகத்துடன் இணைந்து அரவ ணைத்து வாழ்ந்து காட்டிய உத்தம புருஷனாவார். அவருடைய ஓய்வுக் காலம் சிறப்பாக வளமுடன் அமைய வாழ்த்துகின்றேன்.

**உப அதிபர், ஆசிரியர் குழாம்**
**யா/ஆனைக்கோட்டை அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலை.**







யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் வருடாந்த விளையாட்டு நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன் மங்கல விளக்கேற்றுவதையும் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:என்.குமார்)

# முரளி விஜய் அசத்தல் சென்னை அணி வெற்றி

## அரையிறுதி வாய்ப்பையும் தக்கவைத்தது



(சென்னை)

முரளி விஜயின் அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 5 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணியை வெற்றி கொண்டது.

இந்தியாவில் நடைபெற்றுவரும் இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்.) அமைப்பின் மூன்றாவது இருபது-20 கிரிக்கெட் தொடரில் நேற்று சென்னையில் நடைபெற்ற லீக் சுற்றின் 28ஆவது போட்டியில் தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் கும்ளே தலைமையிலான பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பெங்களூர் றோயல் சலஞ்ஜர்ஸ் அணி கலிஸ், ஹோலியின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 161 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஜக் கலிஸ் 49 பந்துகளில் (7 பவுண்டரிகள் அடங்கலாக) 52 ஓட்டங்களையும் விராட் ஹோலி 24 பந்துகளில் (3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 34 ஓட்டங்களையும்), பீற்றர்சன் ஆட்டமிழக்காமல் 14 பந்துகளில் (2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 23 ஓட்டங்களையும் வைற் ஆட்டமிழக்காமல் 13 பந்துகளில் (2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 21 ஓட்டங்களையும் உத்தப்பா 13 பந்துகளில் (2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 21 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஜகதி 2 விக்கெட்டுக்களையும் துஷார ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். பதிலுக்கு 20 ஓவர்களில் 162 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி முரளிவிஜய், ரெய்னாவின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் 19 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களைமாத்திரமிழந்து 165 ஓட்டங்களை குவித்து 5 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இதில் முரளிவிஜய் 39 பந்துகளில் (4 பவுண்டரிகள், 6 சிக்ஸர்கள் அடங்கலாக) 78 ஓட்டங்களையும் சுரேஸ் ரெய்னா ஆட்டமிழக்காமல் 35 பந்துகளில் (4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 44 ஓட்டங்களையும் குவித்தனர்.

பந்து வீச்சில் ஸ்ரையன், அணித்தலைவர் கும்ளே, கலிஸ், கெவின் பீற்றர்சன், வினய் குமார் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

இப் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் வெற்றிக்கு திருப்புமுனையமைத்த முரளிவிஜய் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தான் விளையாடிய 8ஆவது போட்டியில் 3ஆவது வெற்றியைப் பதிவு செய்து 6 புள்ளிகளைப்பெற்றது.

இதேவேளை பெங்களூர் றோயல்ஸ் சலஞ்ஜர்ஸ் அணி தான் விளையாடிய 7 ஆவது போட்டியில் 3 ஆவது தோல்வியைச் சந்தித்தது.

**சென்னை மீண்டது**

இத் தொடரில் கடைசியாக தான் சந்தித்த 4 போட்டிகளில் தொடர்ந்து தோல்வியடைந்த சென்னை சுப்பர் கிங்ஸ் அணி நேற்றைய போட்டியில் வெற்றிபெற்று அரையிறுதி வாய்ப்பை தக்கவைத்தது.

அத்துடன் இத் தொடரில் முதல் சுற்றில் பெங்களூர் அணியிடம் தோல்வியடைந்த சென்னை சுப்பர் கிங்ஸ் அணி நேற்றைய போட்டியில் பதிலடி கொடுத்தது.




# ராஜஸ்தான் அணியை வீழ்த்தியது டில்லி அணி

(டில்லி)

கார்த்திக்கின் அதிரடியான துடுப்பாட்டத்தின்மூலம் டில்லி டேர்டேவில்ஸ் அணி 67 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியை வீழ்த்தியது.

ஐ.பி.எல்.தொடரில் நேற்று டில்லியில் நடைபெற்ற லீக் சுற்றின் 29ஆவது போட்டியில் காம்பீர் தலைமையிலான டில்லி டேர்டேவில்ஸ் அணியும் வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய டில்லி டேர்டேவில்ஸ் அணி கார்த்திக்கின் அதிரடியான ஆட்டத்தின் மூலம் 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டையிழந்து 188 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் தினேஷ்கார்த்திக் 38 பந்துகளில் (6 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள் அடங்கலாக) 69 ஓட்டங்களையும் அணித்தலைவர் கௌதம் காம்பீர் 37 பந்துகளில் (3 பவுண்டரிகள் அடங்கலாக) 43 ஓட்டங்களையும் சேவாக் 12 பந்துகளில் (3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர்கள் அடங்கலாக) 19 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் நார்வால் 3 விக்கெட்டுக்களையும் தைட், வோர்ன் ஆகியோர்தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ர்ாஜஸ்தான் றோயல்ஸ் அணி 17.4 ஓவர்களில் 121 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்து 67 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் நாமன் ஓஜா 14 பந்துகளில் (4 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர்கள் அடங்கலாக) 27 ஓட்டங்களையும் யூசுப்பதான் 14 பந்துகளில் (2 பவுண்டரிகள்,2 சிக்ஸர்கள் அடங்கலாக) 24 ஓட்டங்களையும் டோக்ரா 20 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் அமித் மிஷ்ரா 3 விக்கெட்டுக்களையும் மகரூப் 2 விக்கெட்டுக்களையும் லாட்டா,ஹொலின்வூட், சேவாக் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ்வெற்றியின் மூலம் டில்லி டேர்டேவில்ஸ் அணி தான் விளையாடிய 8 ஆவது போட்டியில் 5 ஆவது வெற்றியைப் பெற்று 10 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தைப்பிடித்துள்ளது.

இதேவேளை ராஜஸ்தான் றோயல்ஸ் அணி தான்விளையாடிய 8 ஆவது போட்டியில் 4 ஆவது தோல்வியைச்சந்தித்தது.

## வேலை வாய்ப்பு

டேவிட் பிரீஸ் மோட்டார் கம்பனி லிமிட்டெட்டின் அங்கீகாரம் பெற்ற RRSC மோட்டர்ஸ் என்ஜினியர்ஸ் நிறுவனத்திற்கு பின்வரும் பதவிகளுக்கு ஆட்கள் தேவை.

பதவிகள்:-

1. முகாமைத்துவ உதவியாளர்
2. விற்பனையாளர் (ஆண், பெண் இருபாலாரும்)
3. மெக்கானிக், பெயின்ரிங், வயரிங் (மோட்டார் சைக்கிள், ஆட்டோ)
4. பயிலுனர்கள்

தொடர்புக்கு:- ரஞ்சித் ரிப்பெயரிங் அன் சேவிஸ் சென்ரர்

யாழ். வீதி, மானிப்பாய்.

T.P: 077 3107549, 021 3737808

(சி-4957)



## த. தே. கூட்டமைப்புத் தலைமைகளின் துரோகங்கள் மூடி மறைக்கப்பட்டு ஊடகங்களில் உன்னதமான தலைவர்களாக சித்தரிக்கப்படுகின்றனர்

இந்தியாவிடம் விலைபோன தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைமை இந்தியாவின் சதித் திட்டத்துக்கு அமைவாக கூட்டமைப்பில் இருந்து, புலிகள் கட்டி வளர்த்து வந்த தமிழ்த் தேசியக் கொள்கைகளில் உறுதியாக இருந்த எம்மை வெளியேற்றியது.

எம்மை வெளியேற்றியதற்கான உண்மையான காரணத்தை மூடிமறைத்து, நாம் அரசிடம் விலைபோனவர்கள் எனவும் அரசுடன் ஒப்பந்தம் செய்தவர்கள் எனவும் கூட்டமைப்பினர் தமது பத்திரிகையில் முற்றிலும் பக்கச் சார்பான முறையில் பொய்யான செய்திகளை பிரசுரித்து வருகின்றனர் கூட்டமைப்பு தலைமையின் துரோகத்தனங்களை மூடிமறைத்து எம்மீதான பொய்யான விடயங்களை மக்கள் நம்பும்படி பிரச்சாரப் படுத்தினால் மட்டுமே கூட்டமைப்பில் தொங்கிக்கொண்டிருக்கின்ற பலர் தேர்தலில் வாக்குகளைப் பெறமுடியும் என்பதற்காகவே துரோகங்கள் மறைக்கப்படுகின்றன .

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைமை இந்தியாவின் பிராந்திய நலனைத் திருப்திப் படுத்துவதற்கு, மக்களுக்கு தெரியாமல் தமிழ்த் தேசியத்துக்கு விரோதமாக அரைகுறை தீர்வு தீர்வுத்திட்டத்தை தயாரித்து இரகசியமாக புதுடில்லிக்கு வழங்கியமை தமிழ் மக்களுக்கு செய்த மாபெரும் தமிழ் இனத் துரோகம்.

கூட்டமைப்புத் தலைமை விடுதலைப் புலிகளை தாம் ஒருபோதும் தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகளாக ஏற்றுக் கொள்ளவில்லை என பிரச்சாரப்படுத்தி வருகின்றார்கள். இது விடுதலைப் புலிகள் எமது இனத்தின் விடுதலைக்காக செய்த தியாகங்கள் அனைத்தையும் துடைத்து அழிக்க வேண்டும் என்ற இந்தியாவின் சதித் திட்டத்திற்கு செயல் வடிவம் கொடுக்கின்ற திட்டமிட்ட துரோகச்செயல்.



எமது உண்மையான நிலைப்பாட்டை சரியாக மக்களுக்கு வெளிப்படுத்த முடியவில்லை. த. தே. கூட்டமைப்புக்கு சார்பான ஊடகங்கள் எமது பக்க நியாயங்கள் முழுவதையும் மூடி மறைக்கின்றன.

எமது உயிர் உள்ளவரை தலைவன் கட்டி வளர்த்த தமிழ்த் தேசியக் கொள்கைகளை கைவிடப் போவதில்லை.

செல்வராசா கஜேந்திரன்

பாராளுமன்ற உறுப்பினர்

முன்னாள் யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர்

(சி-4886)


## பொன்சேகாவின் உடல் நிலை...

பேச்சாளர் உண்மைத் தகவல்களை வெளியிடுவதில்லை என அவர் குற்றம்சுமத்தியுள்ளார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எனது கணவரின் உடலில் துப்பாக்கித் தோட்டாக்கள் இருப்பதால் நோய்கள் வராதவண்ணம் கவனிக்கப்பட வேண்டும். ஆனால் அது தொடர்பில் யாரும் அக்கறை எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை.

நான் எனது கணவரைப் பார்க்கச் சென்றிருந்த வேளை விசேட வைத்திய நிபுணரைக் கொண்டு உடல் நிலை பராமரிக்கப்பட்டதாகச் சிங்கள நாளிதழ் ஒன்றுக்கு இராணுவப் பேச்சாளர் கூறியிருந்தார். அது அப்பட்டமான பொய்யாகும்.

எனது கணவருக்கு நிபுணத்துவ மருத்துவர்களின் சேவை அவசியப்படுவதாகக் கோரிக்கை விடுத்த போதிலும் உரிய பதில் கிடைக்கப் பெறவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)


## வேலைக்கு ஆட்கள் தேவை

சேல்ஸ்மன் : O/L படித்தவர்கள்

உதவி முகாமையாளர்: A/L படித்தவர்கள்

தொடர்பிற்கு:

270, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம்.

T.P.: 021 222 2403

(சி-4959)


## பொன்சேகா...

பொன்சேகாவின் ஆட்கொணர்வு மனு மற்றும் இராணுவ நீதிமன்றத்திற்கு எதிரான மனு ஆகியவற்றை விசாரணைக்குத் தொடர்ந்தும் எடுத்துக் கொள்ளலாமா என்பது பற்றிய அதன் தீர்ப்பை மே மாதம் 3 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய, மேஜர் ஜெனரல்கள் எச்.எல். வீரதுங்க, ஏ.ஆர்.எல்.விஜேதுங்க, டி.ஆர்.வி.பி. ஜெயதிலக மற்றும் றியர் அட்மிரல் (பிரதி சொலிசிட்டர் ஜெனரல்) டபிள்யூ. ஜே.எல்.பெர்னாண்டோ ஆகியோருக்கே இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டது.

இராணுவ நீதிமன்ற மனு தொடர்பான பணிப்புரை பற்றி சட்டமா அதிபர் விள்க்கமளிக்கையில் இந்தப் பணிப்புரை இராணுவ நீதிமன்ற விசாரணையைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கு இடமளிக்கும் என்றும் ஜெனரல் பொன்சேகாவை இராணுவப் பாதுகாப்பில் தொடர்ந்து வைத்துக் கொள்ள முடியும் என்றும் கூறினார். (ச-5)


## தமிழர் விடுதலைக் கூட்டணி



வீ.ஆனந்தசங்கரி

X 1

வெற்றுக் கோசங்கள் வேண்டாம்

வீழ்ந்த மக்களுக்கு கரம் கொடுப்போம்

X



ஏழாலை த.திருஞானசம்பந்தர் J.P

(Ret. Station Master)

X 3

(சி-5004)



## பாராளுமன்ற பொதுத் தேர்தல் 2010

## தமிழ் தேசியக் கூட்டமைப்பு

வலி தந்தாரை தோற்கடிப்போம்-நம்

விதி வெல்ல வாக்களிப்போம்

X

10 X

இலங்கைத் தமிழரசுக் கட்சி

எங்கள் குரல்களையும்

ஆதாரமான வாக்குகளையும்

நிரந்தரமான உரிமைகளையும்

போராடிய வாழ்வையும்

இழக்க முடியாத பூர்வீக தாயகத்தையும்

எங்களுடையவை என்பதை

எங்களது வாக்குகளால் நிரூபிப்போம்!



சிவஞானம் சிறீதரன்

அதிபர், கிளி/கிளிநொச்சி மகாவித்தியாலயம்(கனிஸ்ரா)

வடமராட்சி வாக்காளப் பெருமக்கள்

(சி-5003)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.04.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.